# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024–2025

### மானியக் கோரிக்கை எண். 49

# உதயநிதி ஸ்டாலின்

இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

## பொருளடக்கம்


| படலம் எண். | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1 | தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் | 11 |
| 2 | விளையாட்டு உட்கட்டமைப்பு | 47 |
| 3 | விளையாட்டு மேம்பாட்டுக்கான முக்கிய முயற்சிகள் | 70 |
| 4 | பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல் | 95 |
| 5 | பிற விளையாட்டுப் போட்டிகள் | 115 |
| 6 | திறன் கண்டறிதல் | 133 |
| 7 | திறன் மேம்பாடு | 143 |
| 8 | விளையாட்டுச் சாதனைகள் | 166 |
| 9 | விருதுகள், ஊக்கத் தொகை, உதவித் தொகை, ஓய்வூதியம் மற்றும் பிற நலத் திட்டங்கள் | 174 |
| 10 | வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்வியில் விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு | 195 |
| 11 | இளைஞர் நல இயக்குநரகம் | 202 |
| 12 | நாட்டு நலப்பணித் திட்டம் | 224 |
| 13 | தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் | 254 |
| 14 | தேசிய மாணவர் படை | 287 |
| 15 | பின்னிணைப்பு | 326 |

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது

தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

திருக்குறள்–596

எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும், அவ்வுயர்வுக் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

## முன்னுரை

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

விளையாட்டு தனிநபரின் ஒட்டுமொத்த வளர்ச்சி, உடல் மற்றும் மன நல்வாழ்வை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் விளையாட்டில் ஈடுபடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதுடன் மனத்திறனை கூர்மைப்படுத்தி குணநலன்கள் மற்றும் உடல் இயக்கங்களை மேம்படுத்துகிறது. மேலும் விளையாட்டு, ஒழுக்கம், ஆரோக்கியம், ஆக்கத்திறன் மற்றும் மனத்திறனை வளர்த்து வாழ்க்கையின் சவால்களை திறம்பட சமாளிப்பதற்கு தனிநபர்களை ஆயத்தப்படுத்துகிறது. குழு விளையாட்டுகளில் பங்கேற்பது, குழு மனப்பான்மை மற்றும் தலைமைத்துவ பண்புகளையும் வளர்க்கிறது.

2000–2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின் போது, நமது இளைஞர்கள் மற்றும்

விளையாட்டு வீரர்களின் துடிப்பான ஆற்றல்களை அவர்களின் வாழ்க்கையின் அந்தந்தத் துறைகளில் சிறந்து விளங்கச் செய்வதற்காக அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், இளைஞர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையை உருவாக்கினார்.

**உடற்தகுதி**

உடற்தகுதி என்பது உடல் நலன் மற்றும் மன நலனை உள்ளடக்கிய பன்முகத்தன்மை கொண்டதாகும். உடற்தகுதி என்பது வேலை மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் இரண்டில் திறமையாக செயல்படும் ஆரோக்கியமான உடல், மனநலத்தை வளர்ப்பதுடன் சீரான மற்றும் நிறைவான வாழ்வுக்கு வழிவகுக்கிறது. உடல் நலத்தை பராமரிப்பது, ஆயுட்காலத்தை நீட்டித்து உடல்நலப் பாதிப்பைக் குறைப்பதோடு ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கிறது.

**உடற்கல்வி**

ஒரு குழந்தையின் ஒட்டுமொத்த கற்றலில் உடற்கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. இது தனி மனித வாழ்வில் விளையாட்டு மற்றும் உடற்தகுதியின் நன்மைகளை புகுத்துவதுடன் முக்கிய பண்புகளான சுய ஒழுக்கம், திறன், நம்பிக்கை மற்றும் சுயமரியாதை போன்றவற்றை விதைக்க உதவுகிறது. முறையாக வடிவமைக்கப்பட்ட உடற்கல்வித் திட்டம் தனிநபர் மற்றும் சமூகத்தின் வளமான எதிர்காலத்திற்கான அடித்தளத்தை அமைப்பதோடு, இளைஞர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்விற்கான கலாச்சாரத்தை வளர்க்கிறது.

**இளைஞர் நலன்**

இளைஞர்கள் எதிர்காலத்தின் தலைவர்கள் மட்டுமல்லாது, தற்போதைய சமுதாய மேம்பாட்டிற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குபவர்களாக உள்ளனர். சமூக மாற்றம் மற்றும் மேம்பாட்டை உள்ளடக்கிய தேசிய வளர்ச்சியில் இளைஞர்களின்

பங்களிப்பு வரலாற்று காலந்தொட்டே முன்னிலையில் உள்ளது. இளைஞர்களின் கற்றலையும் திறனையும் சரியாக வழிநடத்துவது அவசியமானதாகும். ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆரோக்கியமான, ஒழுக்கமான மற்றும் திறமையான இளைஞர்கள் தேசிய வளர்ச்சி மற்றும் செழுமைக்கான அடித்தளமாக அமைகின்றனர்.

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் துறைகள்**

1. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT)
2. இளைஞர் நல இயக்குநரகம் (DYW)
3. தேசிய மாணவர் படை (NCC)
4. நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)
5. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் (TNPESU)
6. நேரு யுவ கேந்திர சங்கதன் (NYKS)

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

மாநிலத்தில் விளையாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக 1992 ஆம் ஆண்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டை மேம்படுத்துவதிலும், விளையாட்டு தொடர்பான அரசின் பல்வேறு கொள்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. துடிப்பான விளையாட்டு கலாச்சாரத்தை வளர்ப்பது, விளையாட்டு அனைவரும் அணுகக்கூடிய வகையில் இருப்பது மற்றும் அடிமட்ட நிலையிலிருந்து உயர்மட்ட நிலை வரை விளையாட்டு திறமைகளை வளர்ப்பது போன்றவை இந்த அமைப்பின் நோக்கமாகும்.

**இளைஞர் நல இயக்குநரகம்**

2013ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இளைஞர் நல இயக்குநரகம், இளைஞர்களின் ஆற்றலை அங்கீகரித்து, அவர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த இயக்குநரகம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் அவர்கள் இளைஞர் நல இயக்குநரகத்தின் அலுவல் சாரா இயக்குநராக செயல்படுகிறார்.

சுகாதாரம், ஒழுக்கம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தி, இளைஞர் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளை இந்த அமைப்பு உறுதி செய்கிறது.

**தேசிய மாணவர் படை**

தேசிய மாணவர் படை இளைஞர்களுக்கு இராணுவ முறை பயிற்சிகளை வழங்குவதோடு, அவர்களின் திறன், தன்னம்பிக்கை, உடற் தகுதி, ஒழுக்கம் மற்றும் பொறுப்புணர்வையும் வளர்க்கிறது. தேசிய மாணவர் படை சமூகத்திற்கு நேர்மறையான பங்களிப்பை வழங்கக்கூடிய நபர்களை உருவாக்குவதோடு இளைஞர்களிடையே கடமை மற்றும் தலைமைத்துவ உணர்வையும் வளர்க்கிறது.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

நாட்டு நலப்பணித் திட்டம் இளைஞர்களை சமூக சேவையை நோக்கி வழிநடத்துவதோடு, சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கு சேவை செய்வதற்கான பொறுப்புணர்வையும் வளர்க்கிறது. சமூக சேவையில் ஈடுபடுவதன் மூலம், இளைஞர்கள் கருணை, சமூக விழிப்புணர்வு மற்றும் சமூக நீதிக்கான அர்ப்பணிப்பு ஆகிய சமுதாய முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றுகிறார்கள்

**தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்**

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் விளையாட்டு மற்றும் உடற்கல்வியில் கல்வி மற்றும் தரத்தை மேம்படுத்துவதில் தனித்துவமான பங்கு வகிக்கிறது. இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோள் தரமான உடற்கல்வி மற்றும் பயிற்சி, விளையாட்டு அறிவியல் மற்றும் விளையாட்டு மேலாண்மை ஆகியவற்றை வழங்குவதன் மூலம் மாநிலத்தின் ஒட்டுமொத்த விளையாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குவதாகும்.

**நேரு யுவகேந்திர சங்கதன்**

நேரு யுவ கேந்திர சங்கதன், சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளில் இளைஞர் தன்னார்வலர்களை ஈடுபடுத்துவதில் கவனம் செலுத்துகிறது. நேரு யுவ கேந்திர சங்கதன் தேசத்தை நிர்மாணிக்கும்

செயல்பாடுகளில் இளைஞர்களின் திறனைப் பயன்படுத்துவதற்கும், குடிமைக் கடமை, தலைமைத்துவம் மற்றும் சமூக சேவை உணர்வை ஊக்குவிப்பதற்கும் செயல்படுகிறது.

**நிதி உதவி**

தமிழ்நாடு அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு முயற்சிகளுக்கு தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகிறது.

இந்த அர்ப்பணிப்பின் காரணமாக விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. நடப்பு நிதியாண்டில், முக்கிய துறைகளை ஊக்குவிக்க கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு ரூ.361.25 கோடியும், தேசிய மாணவர் படைக்கு ரூ.66.37 கோடியும், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு

பல்கலைக்கழகத்திற்கு ரூ.8.36 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி உதவி, விளையாட்டு கலாச்சாரத்தை வளர்ப்பதிலும், மாநிலம் முழுவதும் உள்ள இளைஞர்களுக்கு அதிகாரமளிப்பதிலும் அரசின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையானது, விளையாட்டு, உடற்கல்வி மற்றும் இளைஞர் நலனை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளது. பல்வேறு முயற்சிகள் மற்றும் தொடர் நிதி உதவி மூலம், தனிநபர்களின் உடல் மற்றும் மன நலனை பேணுவதற்கான வலுவான கட்டமைப்பை உருவாக்குவதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. விளையாட்டு மற்றும் சமூக ஈடுபாட்டின் கலாச்சாரத்தை வளர்ப்பதன் மூலம் தமிழ்நாடு அதன் இளைஞர்களுக்கு ஆரோக்கியமான, ஒழுக்கமான மற்றும் வளமான எதிர்காலத்திற்கான பாதையை உருவாக்குகிறது.

## படலம்–1

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

இளைஞர்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு விளையாட்டு இன்றியமையாத ஒன்றாகும். விளையாட்டில் ஈடுபடுவது உடல், மனநலம் மற்றும் உணர்வுப்பூர்வமான வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு, இளைஞர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுத்தப்படுவதை உறுதி செய்கிறது. விளையாட்டுகளில் பங்கேற்பது, இளைஞர்களிடையே போட்டி மனப்பான்மை, நேர மேலாண்மை, நிருவாக திறன்கள் மற்றும் குழுவாக செயல்படும் திறன் போன்ற அனைத்து பண்புகளும் இளைஞர்களின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. விளையாட்டுகளில் சிறந்து விளங்குவது பெருமித உணர்வு மற்றும் தன்னம்பிக்கையை வளர்த்து, மகத்தான வாய்ப்புகளை அளிக்கிறது.

தமிழ்நாடு அரசு இளைஞர்களின் ஆற்றல், ஆர்வம் மற்றும் விருப்பங்களை விளையாட்டில் பயன்படுத்த அரசாணை (நிலை) எண்.641, கல்வி (ஒய்) துறை, நாள் 18.7.1992 மூலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை அமைத்தது. இதற்கு முன்னர் இயங்கி வந்த விளையாட்டு மற்றும் இளைஞர் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இத்துறை உருவாக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இவ்வாணையத்தின் தலைவராக செயல்படுகிறார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தனி நபர்கள் தங்கள் திறமை மற்றும் ஆர்வங்களை முழுமையாக வெளிப்படுத்தவும், உயர் நிலை போட்டிகளில் விளையாடி தமிழ்நாட்டை ஒரு முன்னணி விளையாட்டு மையமாக உருவாக்கும் திட்டத்துடன் செயல்படுகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழ்நாட்டில் விளையாட்டுக்கான உயரிய அமைப்பாகும். இவ்வாணையம், விளையாட்டு மற்றும் இளைஞர் நலப் பணிகள் குறித்த தமிழ்நாடு அரசின் கொள்கை முடிவுகளைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அனைவரையும் உள்ளடக்கிய போட்டி நிறைந்த சூழலை உருவாக்கி வலுவான விளையாட்டுக் கலாச்சாரத்தின் மூலம் இளைஞர்கள் பயனடைய பாடுபடுகிறது. விளையாட்டு உட்கட்டமைப்புகளை நிறுவுவதன் மூலமும், அரசு மற்றும் தனியார் பங்களிப்பைப் பயன்படுத்தி பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலமும் விளையாட்டில் ஈடுபட்டுள்ள இளைஞர்களிடையே உடல் தகுதி, திறமைகளை கண்டறிதல், போட்டி மனப்பான்மை மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.

| ஒலிம்பிக் மற்றும் இதர விளையாட்டுகள் | | |
|---|---|---|
| ஒலிம்பிக் விளையாட்டுகள் | | இதர விளையாட்டுகள் |
| • வில்வித்தை | • ஜூடோ | • பிரிட்ஜ் |
| • தடகளம் | • படகோட்டுதல் | • கோ–கோ |
| • இறகுபந்து | • துப்பாக்கி சுடுதல் | • ஸ்குவாஷ் |
| • கூடைப்பந்து | • அலை சருக்குதல் | • களரியபயட்டு |
| • கடற்கரை கையுந்துபந்து | • நீச்சல் | • சதுரங்கம் |
| • குத்துச்சண்டை | • மேசைப்பந்து | • மல்லர்கம்பம் |
| • வாள்சண்டை | • டேக்வாண்டோ | • சறுக்கு விளையாட்டு |
| • கால்பந்து | • டென்னிஸ் | • மட்டைப்பந்து |
| • கராத்தே | • ட்ரையத்தலான் | • சிலம்பம் |
| • மிதிவண்டி ஓட்டுதல் | • கையுந்துபந்து | • எறிபந்து |
| • ஜிம்னாஸ்டிக்ஸ் | • பளுதூக்குதல் | • கபாடி |
| • கைப்பந்து | • மல்யுத்தம் | • சாஃப்ட் டென்னிஸ் |
| • வளைகோல்பந்து | | • வூசூ |

## 1.1 விளையாட்டில் உன்னத நிலையை அடைவதற்கான உத்திகள்

போட்டிகளில் பங்கேற்கவும் சிறந்து விளங்கவும் திறமையான, ஆற்றல்மிக்க, அதிநவீன அமைப்பை உருவாக்குவதை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நோக்கமாக கொண்டுள்ளது.

ஆணையத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

**1.1.1. விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் தரம் உயர்த்துதல்:**

மாநிலத்தில் விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் தரம் உயர்த்துவதன் மூலம் போட்டிகள் மற்றும் விளையாட்டுகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்துதல்.

**1.1.2 விளையாட்டுத் திட்ட செயலாக்கம்**

விளையாட்டு போட்டிகள் மற்றும் விளையாட்டு வீரர்களின் நலனை மேம்படுத்த தற்போதுள்ள திட்டங்களை செயல்படுத்துதல்.

**1.1.3. விளையாட்டில் திறனாளர்களை கண்டறிதல் மற்றும் பயிற்சி அளித்தல்**

திறன் மிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற ஏதுவாக தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்தல்.

**1.1.4. ஊக்கத் தொகை மற்றும் விருதுகள்**

தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் உயரிய அளவில் வெற்றி பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு ஊக்கத் தொகைகளும், விருதுகளும் வழங்குதல்.

**1.1.5. விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாடு:**

மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் விளையாட்டு வீரர்களை மாநில / தேசிய மற்றும் பன்னாட்டு போட்டிகளில் விளையாட பயிற்சியளித்தல் மற்றும் பல்வேறு நிலைகளில் விளையாட்டுக் கட்டமைப்புகளை திட்டமிட்டு மேம்படுத்துதல்.

**1.1.6. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு**

விளையாட்டு தொடர்பான தொழில்நுட்பங்கள், உயிர் இயந்திரவியல், விளையாட்டு உளவியல் மற்றும் விளையாட்டு அறிவியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக முன்னெடுத்தல், பொறுப்பேற்றல்,

நிதியுதவி செய்தல், ஊக்குவித்தல் மற்றும் ஆதரவு அளித்தல்.

**1.1.7. அனைவரையும் உள்ளடக்கிய விளையாட்டு நிகழ்ச்சிகள்**

மாற்றுத் திறனாளிகளின் சிறப்புத் தேவைகளை அங்கீகரித்து அவர்களை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வழிவகை செய்தல் மற்றும் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் பங்கேற்க வழிவகை செய்தல்.

**1.1.8. சாகச விளையாட்டுகள்:**

மாநிலத்தில் சாகச விளையாட்டுகளான மலையேற்றம், பெருங்கடல் சாகச பயணம் மற்றும் பாறையேறுதல் ஆகியவற்றை ஊக்குவித்தல்.

**1.1.9. மேம்பட்ட பயிற்சி:**

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் மேம்பட்ட பயிற்சி பெற்று பன்னாட்டு போட்டிகளில் பங்கேற்று சிறப்பாக செயல்பட வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்தல்.

**1.1.10. உடற்தகுதியை ஊக்குவித்தல்:**

பொதுமக்களை ஆரோக்கியமானவர்களாகவும் வலுவானவர்களாகவும் மாற்ற அவர்களிடையே உடற்தகுதியின் முக்கியத்துவத்தை உணர்த்தி, விளையாட்டு மற்றும் ஆரோக்கியத்தின் மீது கவனம் கொள்ளச் செய்தல்.

**1.2. சாதனைகள் மற்றும் முயற்சிகள்**

தமிழ்நாட்டில் விளையாட்டை மேம்படுத்துவதிலும், வலுவான விளையாட்டு கலாச்சாரத்தை உருவாக்குவதிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்கிறது.

சில முக்கிய சாதனைகள் மற்றும் முயற்சிகள்:

**1.2.1. உட்கட்டமைப்பு மேம்பாடு**

- **விளையாட்டு வளாகங்கள் மற்றும் அரங்கங்கள்:** தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு

விளையாட்டு வளாகங்கள் மற்றும் விளையாட்டரங்கங்களை உருவாக்கியுள்ளது. இந்த வசதிகள் பல்வேறு விளையாட்டுகளுக்கு ஏற்ற அதிநவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது.

- **பயிற்சி மையங்கள்:**

  விளையாட்டு வீரர்களுக்கு உயர்தர பயிற்சி சூழலை உருவாக்கி பல்வேறு விளையாட்டு பிரிவுகளுக்கு சிறப்பு பயிற்சி மையங்களை நிறுவுதல்.

- **தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்துதல்:**

  சர்வதேச தரத்திற்கு இணையாக தற்போதுள்ள விளையாட்டு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல்.

### 1.2.2. விளையாட்டு திறன் மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் மேம்படுத்துதல்

- **திறன் கண்டறியும் திட்டங்கள்:**

  இளம் வயதிலேயே பதக்கம் வெல்ல வாய்ப்புள்ள விளையாட்டு வீரர்களை அடையாளம் காண பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் திறன் கண்டறிதல் திட்டங்களை செயல்படுத்துதல்.

- **விளையாட்டு அகாடமிகள்:**

  திறமைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தவும் விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கவும் விளையாட்டு அகாடமிகளை அமைத்தல்.

- **உதவித்தொகை மற்றும் நிதி உதவி:**

  திறமையான விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி மற்றும் மேம்பாட்டிற்கு உறுதுணையாக உதவித்தொகை மற்றும் நிதி உதவி வழங்குதல்.

### 1.2.3. பயிற்சியளித்தல் மற்றும் பயிற்சி பெறுதல்

- **பயிற்சி முகாம்கள்:**

  விளையாட்டு வீரர்களின் திறனை மேம்படுத்த தேசிய மற்றும் பன்னாட்டு பயிற்றுநர்களுடன் பயிற்சி முகாம்கள் நடத்துதல்.

- **பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம்:**

  பயிற்றுநர்களுக்கு நவீன விளையாட்டு நுணுக்கங்கள் மற்றும் வழிமுறைகளை பயிற்சி அளிக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- **மேம்பட்ட பயிற்சி திட்டங்கள்:**

  தலைசிறந்த விளையாட்டு வீரர்களை தேசிய மற்றும் பன்னாட்டு போட்டிகளுக்கு தயார்படுத்தும் வகையில் அவர்களுக்கு நவீன பயிற்சி அளித்தல்.

**1.2.4. போட்டிகள் மற்றும் நிகழ்வுகள்**

- **வருடாந்திர விளையாட்டு அட்டவணை:**
  மாநில, தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டு அட்டவணையை உருவாக்குதல்.
- **பள்ளி மற்றும் கல்லூரி விளையாட்டுப் போட்டிகள்:**
  பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொடர்ச்சியான விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரவலான பங்கேற்பை ஊக்குவித்தல்.
- **பங்கேற்பதற்கான ஆதரவு:**
  மாநிலத்திற்கு வெளியே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ள நிதி மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.

**1.2.5. அங்கீகாரம் மற்றும் ஊக்கத் தொகைகள்:**

- **விருதுகள் மற்றும் கௌரவங்கள்:**
  சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அவர்களின் சாதனைகளை அங்கீகரிப்பதற்கும்

மற்றவர்களை ஊக்குவிப்பதற்கும் விருதுகள் வழங்கி கௌரவித்தல்.

- **ரொக்கப் பரிசுகள் மற்றும் வெகுமதிகள்:**

  பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் பெறுபவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் மற்றும் வெகுமதிகளை வழங்குதல்.

**அங்கீகாரம்:**

ஊடக செய்திகள் மற்றும் பொது நிகழ்வுகள் மூலம் விளையாட்டு வீரர்களுக்கு அங்கீகாரம் கிடைப்பதை உறுதி செய்தல்.

### 1.2.6. அனைவரையும் உள்ளடக்கிய விளையாட்டு நிகழ்ச்சிகள்

- **மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான சிறப்புத் திட்டங்கள்:**

  விளையாட்டுகளில் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களின் பங்கேற்பை

ஊக்குவிக்கும் வகையில் சிறப்புத் திட்டங்களை உருவாக்குதல்.

- **சிறப்பு விளையாட்டு உபகரணங்கள்:**

  மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களின்

  தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பு விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்.

- **மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகளை ஊக்குவித்தல்:**

  பிரத்தியேக திட்டங்களை உருவாக்கி அதன்மூலம் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களை போட்டிகளில் பங்கேற்க ஊக்குவித்தல்.

### 1.2.7. சாகச மற்றும் பொழுதுபோக்கு விளையாட்டுகள்

- **சாகச விளையாட்டு முகாம்கள்:**

  மலையேற்றம், மலையேறுதல் மற்றும் நீர் விளையாட்டுகள் போன்ற நடவடிக்கைகளை

மேம்படுத்த சாகச விளையாட்டு முகாம்களை நடத்துதல்.

- **சமுதாய பங்கேற்பு:**

  பொழுதுபோக்கு விளையாட்டுகளில் சமுதாய பங்கேற்பை ஊக்குவிக்க உடற்பயிற்சி மற்றும் உடற்தகுதிக்கான கலாச்சாரத்தை வளர்த்தல்.

## 1.3 செயல் திட்டம் மற்றும் உத்தி:

தமிழ்நாடு அரசின் விளையாட்டு மேம்பாட்டுக் கொள்கை, மாநிலத்திலுள்ள அனைத்து வகையான விளையாட்டு நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த செயல்திட்டம் படிநிலை அணுகுமுறைப்படி ஐந்து நிலைகளாக வகைப்படுத்தப்படுகிறது, ஒவ்வொரு நிலையிலும் இளைஞர்கள் படிப்படியாக திறமையை வளர்த்து மேம்பட்ட நிலையை அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.




**நிலை 1 – பெருந்திரள் மற்றும் சமுதாய பங்கேற்பு**

இந்த அடித்தள நிலை பரந்த அடிப்படையிலான பங்கேற்பு மற்றும் ஆரம்ப கட்டத்தில் திறனாளர்களை அடையாளம் காண்பதில் கவனம் செலுத்துகிறது. இதில் பின்வரும் முக்கிய கூறுகள் அடங்கும்:

- **திறனாளர்களை அடையாளம் காணுதல்:**

  பள்ளி மற்றும் சமுதாய நிகழ்ச்சிகள் மூலம் விளையாட்டுத் திறனாளர்களை முன்கூட்டியே கண்டறிதல்.

- **அடிப்படை உட்கட்டமைப்பு:**

  விளையாட்டு மைதானங்கள் மற்றும் சமுதாய விளையாட்டு மையங்கள் போன்ற அத்தியாவசிய விளையாட்டு உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.

- **சமுதாயப்போட்டிகள்:**

  பெருவாரியான பங்கேற்பை ஊக்குவிப்பதற்காக உள்ளூர் அளவிலான விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் போட்டிகளை ஏற்பாடு செய்தல்.

- **அடிப்படை பயிற்சி:**

  பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சமுதாய மையங்கள் மூலம் அடிப்படை பயிற்சி வழங்குதல்.

- **உள்ளூர் நன்கொடையாளர்கள்:**
  சமுதாய விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளிக்க உள்ளூர் நன்கொடையாளர்களை அடையாளம் கண்டு ஊக்குவித்தல்.
- **கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்:**
  தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் விளையாட்டு வீரர்களது பயன்பாட்டிற்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதன் மூலம் விளையாட்டில் பங்கேற்பதை ஊக்குவித்தல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.

இந்த நிலையின் நோக்கமே வலுவான அடிமட்ட அடித்தளத்தை உருவாக்குவது, விளையாட்டில் பங்கேற்கும் மற்றும் உற்சாகத்தின் கலாச்சாரத்தை வளர்ப்பதாகும்.

**நிலை 2 – மாவட்ட நிலை**

இந்த நிலையில் மாவட்ட அளவில் கண்டறியப்பட்ட விளையாட்டுத் திறனாளர்களை மேம்படுத்துவதற்கும் அவர்களின் திறனை பயன்படுத்துவதற்கும் கவனம் செலுத்தப்படுகிறது.

மேற்கொள்ளப்படும் முன் முயற்சிகள் பின்வருமாறு:

- **மாவட்ட விளையாட்டு வளாகங்கள்:**

  மாவட்ட விளையாட்டு வளாகங்களை பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தி மேம்பட்ட பயிற்சி மற்றும் வசதிகள் வழங்குதல்.

- **முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்:**

  மாவட்ட அளவிலான விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், போட்டிகளில் கலந்து கொள்ளவும் இது

முக்கியமான தளமாக செயல்படுகிறது. இப்போட்டிகள் தொடர்பாக பரவலாக விளம்பரம் செய்யப்பட்டதால் மாவட்ட அளவில் 3.70 இலட்சம் விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர்.

இந்த நிலை திறன்களைச் செம்மைப்படுத்துவதையும், விளையாட்டு வீரர்களை உயர் மட்ட போட்டிகளுக்கு தயார்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் அவர்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான வசதிகளும், ஆதரவும் இருப்பதை உறுதி செய்கிறது.

**நிலை 3 – மாநில நிலை**

இதன் இலக்கு மாநில அளவில் வெற்றியாளர்களை உருவாக்குவதாகும். மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகள் பின்வருமாறு:

- **விளையாட்டு விடுதிகள் மற்றும் அகாடமிகள்:** தீவிர பயிற்சி மற்றும் மேம்பாட்டிற்காக விளையாட்டு விடுதிகள் மற்றும் சிறப்பு அகாடமிகளை நிறுவுதல் மற்றும் புதுப்பித்தல்.
- **திறன் மேம்பாட்டு திட்டங்கள்:** மாநில அளவிலான விளையாட்டு வீரர்களை வளர்த்தெடுத்து மேம்படுத்த ஒருங்கிணைந்த திட்டங்களை செயல்படுத்துதல்.
- **மாநில அளவிலான போட்டிகள்:** தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளுக்கு விளையாட்டு வீரர்களைத் தயார்படுத்த மாநில அளவிலான போட்டிகளை நடத்துதல்.

இதன் நோக்கம் உயர் மட்ட போட்டிகளில் தமிழ்நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர்கள் தங்கள் முழு திறனை அடைவதற்கான பாதையை உருவாக்குவதாகும்.

**நிலை 4 – தேசிய நிலை**

இந்த நிலை விளையாட்டு வீரர்களை தேசிய அளவிலான போட்டிகளுக்கு தயார்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

முக்கிய செயல்திட்டங்கள் பின்வருமாறு:

- **மேம்பட்ட பயிற்சி:**

  தேசிய அளவிலான வெற்றியாளர்களை உருவாக்க பல்வேறு மண்டலங்களில் அமைக்கப்பட்டுள்ள முதன்மை நிலை விளையாட்டு மையம் மற்றும் அகாடமிகள் மூலமாக முறையான பயிற்சிகளை வழங்குதல்.

- **தேசிய அளவிலான விளையாட்டு உட்கட்டமைப்பு:**

  தேசிய அளவிலான போட்டிகளுக்கு பொருத்தமான விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்.

- **நிபுணர்களை பயன்படுத்துதல்:**

  நிபுணத்துவ பயிற்றுநர்கள் மற்றும் பயிற்சி மையங்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி பயிற்சிகளை மேம்படுத்துதல்.

- **தேசிய அளவிலான போட்டிகள்:**

  திறன்வாய்ந்த விளையாட்டு வீரர்களை ஈர்க்கவும் திறனை வளர்க்கவும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டிற்குள் நடத்துவதற்கு ஊக்கமளித்தல்.

விளையாட்டு வீரர்கள் தேசிய அளவில் போட்டியிடவும் சிறந்து விளங்கவும் நிபுணத்துவ பயிற்றுநர்கள் மூலம் முறையான பயிற்சிகள் அளித்து உறுதி செய்வதே இந்நிலையின் நோக்கமாகும்.

**நிலை 5 – பன்னாட்டு அளவிலான போட்டிகள்**

முந்தைய நிலைகளில் அடைந்த வெற்றியை அடித்தளமாக கொண்டு, பன்னாட்டு அளவிலான போட்டிகளில் வெற்றி அடைவதே இறுதி இலக்காகும்.

மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகள் பின்வருமாறு:

- **மேம்பட்ட பயிற்சி மற்றும் வசதிகள்:**

  நிபுணத்துவம் வாய்ந்த பயிற்றுநர்களின் மேம்பட்ட பயிற்சி மற்றும் அதனைச் சார்ந்த இதர சேவைகள், பன்னாட்டு அளவிலான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உபகரணங்கள் வழுங்குதல்.

- **பன்னாட்டு அளவிலான போட்டிகள்:**

  பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்பதை ஊக்குவித்தல், நிதி உதவி மற்றும் நவீன பயிற்சி உபகரணங்கள் வழங்குதல்.

- **உலகளாவிய நிபுணர்களை பயன்படுத்துதல்:**

  சிறப்பு வாய்ந்த சர்வதேச பயிற்றுநர்கள் மற்றும் பயிற்சி மையங்களின் சேவையை பயன்படுத்துதல்.

- **பன்னாட்டு அளவிலான போட்டிகளை நடத்துதல்:**

  தமிழ்நாட்டில் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் விளையாட்டு வீரர்களுக்கு உயர்மட்ட போட்டி அனுபவத்தை வழங்குதல்.


விளையாட்டு வீரர்களுக்கு உலக அரங்கில் சிறந்து விளங்குவதற்கு உயரிய ஆதரவு மற்றும் அனைத்து வசதிகளையும் வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

## 1.4 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அரசாணை (நிலை) எண்.641, கல்வி (ஒய்) துறை, நாள்

18.07.1992–ன்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் செயலாண்மை குழு தலைவராக உள்ளார்.

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிர்வாக அமைப்பு:



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர், இளைஞர் நல அலுவல் சாரா இயக்குநராகவும் செயல்பட்டு வருகிறார். இவர் இளைஞர் நல செயல்பாடுகளையும் விளையாட்டு மேம்பாடுகளையும் ஒருங்கிணைக்கிறார்.

**1.4.1 முக்கிய பிரிவுகள் மற்றும் செயல்பாடுகள்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில், பல்வேறு சிறப்புப் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும் விளையாட்டு நிர்வாகம் மற்றும் மேம்பாட்டிற்கு உரிய தனித்துவமான பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த பிரிவுகளில் பின்வருவன அடங்கும்:

- **விளையாட்டு நிகழ்வு பிரிவு:**

  பல்வேறு நிலைகளில் விளையாட்டு நிகழ்வுகள்

மற்றும் போட்டிகளை ஏற்பாடு செய்து நிர்வகிக்கிறது.

- **விளையாட்டு உட்கட்டமைப்பு பிரிவு:**
  விளையாட்டு உட்கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் பராமரிப்பை மேற்பார்வையிடுகிறது.
- **மனித வள மேலாண்மை பிரிவு:**
  தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கான பணி நியமனம், பயிற்சி மற்றும் நலனை நிர்வகிக்கிறது.
- **திட்ட மேலாண்மைப் பிரிவு:**
  பல்வேறு விளையாட்டு மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்வகித்தல்.
- **சட்டம், வணிகம் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு:**
  சட்ட ரீதியான பொருண்மைகளையும் வணிக ரீதியான நடவடிக்கைகளையும் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளையும் கையாள்கிறது.

- **மக்கள் தொடர்புப் பிரிவு:**

  மக்கள் தொடர்பு, ஊடக தொடர்பு மற்றும் சமுதாய தொடர்பு சார்ந்த செயல்பாடுகளை நிர்வகிக்கிறது.

- **நிதி மற்றும் கணக்குப் பிரிவு:**

  நிதி திட்டமிடுதல், வரவு–செலவு திட்டம் மற்றும் கணக்கியல் ஆகியவற்றை நிர்வகிக்கிறது.

- **பொதுமக்கள் குறைதீர்க்கும் பிரிவு:**

  பொதுமக்கள் மற்றும் விளையாட்டு வீரர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் பின்னூட்டங்களை கையாள்கிறது.

- **தகவல் தொழில்நுட்பப் பிரிவு:**

  தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு மற்றும் மின்–ஆளுமை முயற்சிகளை செயல்படுத்தி நிர்வகிக்கிறது.

- **திறன் மேம்பாட்டுப் பிரிவு:**

  விளையாட்டு திறமைகளை அடையாளம் கண்டு வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.

- **இளைஞர் நல இயக்குநரகம்:**

  இளைஞர் மேம்பாட்டை இலக்காகக் கொண்ட முயற்சிகள் மற்றும் திட்டங்களில் கவனம் செலுத்துகிறது.

மாநிலம் முழுவதும் விரிவான செயல்பாட்டிற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 615 ஆகும். இதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் 38 மாவட்ட விளையாட்டுப் அலகுகள், 27 விளையாட்டு விடுதிகள், 4 சிறப்பு விளையாட்டு விடுதிகள் மற்றும் 6 முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் அடங்கும்.

**1.4.2 பயிற்றுநர்கள் நியமனம்**

சாதிக்க துடிக்கும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உயர்தர பயிற்சி அளிக்கும் வகையில், 76 புதிய பயிற்றுநர்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நியமித்துள்ளது.

தமிழ்நாட்டில் சர்வதேச அளவிலான பயிற்சிகளை வழங்குவதற்காக 3 உயர் செயல்திறன் கொண்ட வெளிநாட்டு பயிற்றுநர்கள் மற்றும் 5 நிபுணத்துவ பயிற்றுநர்கள் நியமனம் செய்யப்பட்டதன் மூலம் இந்த முயற்சி வலுப்பெறுகிறது. இந்த முயற்சியின் மூலம், விளையாட்டு வீரர்கள் சிறந்த பயிற்சி பெறுவதை உறுதி செய்து, அவர்களின் செயல்திறனை தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு உயர்த்துகிறது.

**1.5 ஆடுகளம் தகவல் மையம் (அழைப்பு மையம்)**

ஆடுகளம் தகவல் மையம் (அழைப்பு மையம்– 91–9514000777) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.09.2022 அன்று சென்னையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் துவக்கி வைக்கப்பட்டது. இந்த அழைப்பு மையம் விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த

தகவல்களை வழங்கி எளிதாக அணுகுவதற்கு சேவையாற்றுகிறது.

### 1.6 மின் ஆளுமை முன்முயற்சிகள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செயல்முறைகளை நெறிப்படுத்தவும், அதன் சேவைகளை அணுகவும் மின் ஆளுமை முயற்சிகளை செயல்படுத்தியுள்ளது:

#### 1.6.1 தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை போட்டிக்கான பதிவை இணையதளம் மூலம் விண்ணப்பித்தல்:

விளையாட்டு வீரர்கள் நேரடியாக வருவதை தவிர்த்து இணைய தளம் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகள் மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. இதில் விளையாட்டு வீரர்களுக்கான போட்டி நடைபெறும் இடங்கள் மற்றும் தேதிகள் குறித்த குறுஞ்செய்தி அறிவிப்புகளும் அடங்கும்.

### 1.6.2 தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளைக்கு இணையதளம் மூலம் விண்ணப்பித்தல்

- விளையாட்டு வீரர்கள் போட்டிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பெற தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.
- மேலும் பயிற்சிகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றிற்கு உதவ கொடையாளர்கள் இந்த தளத்தை பயன்படுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்காக உருவாக்கப்பட்ட பிற இணையதள பயன்பாடுகள் பின்வருமாறு:

- தமிழ்நாடு முதலமைச்சர் மாநில இளைஞர் விருது
- நலிந்த நிலையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம்

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி சேர்க்கை
- சிறப்பு உதவித் தொகை திட்டங்கள் (ELITE / MIMS / CDS)
- இணையதள விளையாட்டரங்கம் முன்பதிவு
- இணையதள உறுப்பினர் முன்பதிவு
- இணையதள வணிக வளாகம் மேலாண்மை அமைப்பு
- உயரிய ஊக்கத்தொகைக்கான இணையதள விண்ணப்பம் (HCI)
- இணையவழி ஒப்பந்தப்புள்ளி கோருதல்
- அரசுப் பணிகளில் விளையாட்டு வீரர்களுக்கான 3 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கான இணையதள விண்ணப்பம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அதன் விரிவான நிர்வாக அமைப்பு மற்றும் பல்வேறு முன்முயற்சிகளுடன், விளையாட்டு நிர்வாகத்தில் ஒரு

முதன்மை நிறுவனமாக திகழ்கிறது. ஒருங்கிணைக்கப்பட்ட நவீன மின்–ஆளுமை தீர்வுகள், பயிற்சி திறன்களை மேம்படுத்துதல் மற்றும் வலுவான ஆதரவு அமைப்பை பராமரிப்பதன் மூலமும் துடிப்பான விளையாட்டு கலாச்சாரத்தை வளர்த்து அடுத்த தலைமுறை விளையாட்டு வீரர்களை உருவாக்குவதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முனைப்புடன் செயல்படுகிறது.

## படலம் – 2

## விளையாட்டு உட்கட்டமைப்பு

விளையாட்டு வீரர்களின் திறமைகளை வளர்ப்பதற்கு விளையாட்டு உட்கட்டமைப்பு இன்றியமையாதது. விளையாட்டு வீரர்கள் தங்களது தீவிர பயிற்சிக்கும் சர்வதேச அளவில் சாதனை புரிவதற்கும் சர்வதேச தரத்திலான விளையாட்டு வசதிகள் அவசியமாகிறது.

கடந்த 1995–ஆம் ஆண்டு நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், SDAT டென்னிஸ் விளையாட்டு அரங்கம், நுங்கம்பாக்கம் மற்றும் SDAT நீச்சல் ஜிம்னாஸ்டிக்ஸ் பேட்மிண்டன் (AGB) வளாகம்,

வேளச்சேரி போன்ற சிறந்த விளையாட்டு உட்கட்டமைப்புகள் நிறுவப்பட்டுள்ளது.

இத்தகைய உட்கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கிராமப்புற மற்றும் வளரும் புறநகர்ப் பகுதிகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பயன்பெறும் வகையில் மாவட்டங்களில் சர்வதேச தரத்திலான விளையாட்டு வசதிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஏற்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள்–2023, உயர்மட்ட உட்கட்டமைப்பின் அவசியத்தை முக்கியத்துவப்படுத்தியுள்ளது. சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், SDAT டென்னிஸ்

விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், SDAT நீச்சல் ஜிம்னாஸ்டிக்ஸ் பேட்மிண்டன் (AGB) வளாகம், வேளச்சேரி, மதுரை மற்றும் திருச்சி மாவட்ட விளையாட்டரங்கங்கள் உள்ளிட்ட முக்கிய மைதானங்கள் இப்போட்டிக்கு ஏற்றவகையில் புதுப்பிக்கப்பட்டு வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டன. மாநிலத்தில் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பை மேம்படுத்த நவீன விளையாட்டு உட்கட்டமைப்பை வழங்குவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

### 2.1 சர்வதேச தரத்திலான வசதிகள்

#### 2.1.1 ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை

சென்னையிலுள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் உயர்மட்ட விளையாட்டு உட்கட்டமைப்பை வழங்குவதில் தமிழ்நாடு அரசின் உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாக உள்ளது.

இவ்விளையாட்டரங்கம் 40,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதியுடன், பல்வேறு விளையாட்டு பிரிவுகளுக்கு ஊக்கமளித்திடும் வசதிகளையும் கொண்டுள்ளது.

**இவ்விளையாட்டரங்கின் முக்கிய அம்சங்கள்:**

I. 400 மீட்டர் புதிதாக அமைக்கப்பட்ட புறஊதாக்கதிர்களால் (UV) பாதிக்கப்படாத (Class–1) 8–வரிசை செயற்கை இழை தடகள ஓடுபாதை.

II. புல்தரை கால்பந்து மைதானம்.

III. 60 மீ. குளிரூட்டப்பட்ட உள்ளரங்க தடகள பயிற்சி ஓடுபாதை.

IV. ஜூடோ, பளுதூக்குதல், மேசைப்பந்து, குத்துச்சண்டை, சதுரங்கம், கேரம், கடற்கரை கையுந்துபந்து மற்றும் கையுந்து பந்து போன்ற விளையாட்டுகளுக்கான பிரத்யேக அரங்கங்கள்.

V. அனைத்து ஆடுகளங்களிலும் மின்னொளி (FOP) வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

VI. பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு

விளையாட்டு போட்டிகள் இங்கு நடத்தப்படுவதால் இந்த விளையாட்டரங்கில் DMX கட்டுப்பாட்டு அமைப்புடன் LED விளக்குகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

VII. குளிரூட்டப்பட்ட உடற்பயிற்சி மையம், மாநில விளையாட்டு ஊக்குவிப்பு மையம் (SSFC), 10 மீட்டர் துப்பாக்கி சுடும் பயிற்சி மையம், ஊடக அரங்கம் மற்றும் கூட்ட அரங்கம் போன்ற கூடுதல் வசதிகள் விளையாட்டு வீரர்கள் மற்றும் பார்வையாளர்களின் அனுபவத்தையும் மேம்படுத்துகிறது.

ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் கையுந்துபந்து, 3x3 கூடைப்பந்து, கேரம், சதுரங்கம், டேக்வோண்டோ, ஜூடோ, வாள்சண்டை, பாரா விளையாட்டு மற்றும் பிற உள்ளரங்க விளையாட்டுகளுக்கான வசதிகளைக் கொண்ட மாநில அளவிலான பயிற்சி மையம் (G+3) சமீபத்தில் கட்டப்பட்டுள்ளது. இவை விளையாட்டு வீரர்களுக்கு ஒருங்கிணைந்த பயிற்சி வாய்ப்பினை வழங்கும்

மாநிலத்தின் உறுதிப்பாட்டினை அடிக்கோடிட்டு காட்டுகிறது. இந்த மையம் உள்ளரங்க விளையாட்டு வீரர்களுக்கான மையமாக மட்டுமல்லாமல் ஒலிம்பிக் அகாடமியாகவும், ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களுக்கு உயர்தர அறிவியல் சார்ந்த பயிற்சி வசதிகளை வழங்கும் மையமாகவும் விளங்குகிறது.

### 2.1.2 ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம், சென்னை

சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம் சுமார் 8,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதியுடன், பல்வேறு உள்ளரங்க மற்றும் விளையாட்டு அல்லாத நிகழ்வுகளுக்கான மையமாகவும் மற்றும் வெளிப்புற விளையாட்டுக்கள் நடத்தும் அரங்கமாகவும் செயல்படுகிறது.

மைதானத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- இவ்விளையாட்டரங்கில் மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதியுடன் கூடிய மரத்தளத்திலான ஆடுகளம் உள்ளது. இந்த ஆடுகளத்தில் இறகுபந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கேரம், சதுரங்கம், கராத்தே, சிலம்பம், வாள்சண்டை, கைப்பந்து, ஜூடோ, கபாடி, மேசைப்பந்து, டேக்வாண்டோ, பளுதூக்குதல், மல்யுத்தம் மற்றும் கையுந்துபந்து போன்ற விளையாட்டுகள் விளையாடலாம். மேலும் விளையாட்டு அல்லாத பிற நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

- மின்னொளி வசதியுடன் கூடிய சிமெண்ட் தரை கூடைப்பந்து ஆடுகளங்கள்.

- கைப்பந்து மைதானம், மின்னொளி வசதியுடன் கூடிய உள்ளரங்க குத்துச்சண்டை வளையம்.

- மின்னொளி வசதியுடன் கூடிய சர்வதேச அளவிலான திறந்தவெளி செயற்கை இழை ஸ்கேட்டிங் வளையம்.
- கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் போன்ற விளையாட்டு அல்லாத நிகழ்வுகளை நடத்திடும் வகையில் நவீன கூட்டரங்கம்.

**2.1.3 ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம், ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம், சென்னை**

- பார்வையாளர்கள் அமரும் இருக்கையுடன் கூடிய 8 வரிசைகள் கொண்ட 400 மீட்டர் செயற்கை இழை தடகள ஓடுபாதை.
- புல்தரை கால்பந்து மைதானம்
- உள்ளரங்க நீர் சிகிச்சை நீச்சல் குளம்.
- குளிரூட்டப்பட்ட உள்ளரங்க ஸ்குவாஷ் மைதானம்.
- குளிரூட்டப்பட்ட உள்ளரங்க இறகுபந்து அரங்கம்.

- மின்னொளி வசதியுடன் கூடிய கையுந்துபந்து மற்றும் கூடைப்பந்து ஆடுகளங்கள்.
- பள்ளி மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி மற்றும் முதன்மை நிலை விளையாட்டு மையம், கல்லூரி மாணவியர்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி.
- மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு வளாகம் கட்டப்பட்டு வருகிறது.

### 2.1.4 மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், சென்னை

- 8,670 பார்வையாளர்கள் அமரும் வசதி கொண்ட இவ்விளையாட்டரங்கில் மின்னொளி வசதியுடன் கூடிய பாரிஸ் ஒலிம்பிக் தரத்திலான செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம்.
- Five – a – side வளைகோல்பந்து ஆடுகளம்.

- மேற்கூரை மற்றும் மின்னொளி வசதியுடன் கூடிய கையுந்துபந்து ஆடுகளங்கள்.
- நவீன உடற்பயிற்சி கூடம்.

இவ்விளையாட்டரங்கில் 03.08.2023 முதல் 12.08.2023 வரை ஆசிய ஆண்கள் ஹாக்கி வாகையர் போட்டி நடைபெற்றது. இவ்விளையட்டரங்கில் புதியதாக அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் 28.07.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### 2.1.5 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல், ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் பேட்மிண்டன் (AGB) வளாகம், வேளச்சேரி, சென்னை

- 50 மீ x 25 மீ அளவுள்ள சர்வதேச தரத்திலான 8 வரிசைகள் கொண்ட பந்தய நீச்சல் குளம்
- 18 மீ x 25 மீ x 5 மீ ஆழம் கொண்ட டைவிங் நீச்சல் குளம்

- 25 மீ x 25 மீ அளவிலான பயிற்சி நீச்சல் குளம் மற்றும் பார்வையாளர்கள் மாடம்
- குளிரூட்டப்பட்ட வசதியுடன் கூடிய உடற்பயிற்சி மையம்
- இறகுபந்து உள்ளரங்கம்.
- ஜிம்னாஸ்டிக் கூடமானது சர்வதேச போட்டிகளுக்கு ஏற்ற வகையில் புதுப்பிக்கப்பட்டு நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

### 2.1.6 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம்

- 7000 பார்வையாளர்கள் இருக்கைகள் கொண்ட விளையாட்டரங்கம், ஒரு மைய ஆடுகளம் மற்றும் ஆறு பயிற்சி ஆடுகளங்களைக் கொண்டுள்ளது. அனைத்து ஆடுகளங்களிலும் மின்னொளி வசதியுடன் கூடிய சர்வதேச தரத்திலான

செயற்கை இழை தரைதளம் அமைக்கப்பட்டுள்ளது.

- வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பயிற்சி செய்வதற்கு குளிர்சாதன வசதியுடன் கூடிய உடற்பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

## 2.2 மாவட்ட விளையாட்டு வளாகங்கள்

மாவட்டங்களில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 32 மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டு வளாகங்களில் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கபாடி, கைப்பந்து, நீச்சல் குளம் மற்றும் கையுந்துபந்து விளையாட்டு மைதான வசதிகளுடன் உள் விளையாட்டரங்கம் ஒன்றும் உள்ளது. மேலும், கூடுதல் விளையாட்டுகளுக்கான மைதான வசதிகள் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், புதிய மாவட்டங்களான தென்காசி மற்றும் செங்கல்பட்டு ஆகியவற்றில் மாவட்ட விளையாட்டு வளாக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

புதியதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் மேற்படி விளையாட்டு வசதிகளுடன் கூடிய புதிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்படவுள்ளன.

### 2.3 பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கங்கள்

தற்போது 23 மாவட்டங்களில் 30 பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையில், நேரு பூங்கா, மாவட்ட விளையாட்டு வளாகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய AGB விளையாட்டு வளாகம், வேளச்சேரி, ஷெனாய் நகர் விளையாட்டு வளாகம், முகப்பேர் விளையாட்டு வளாகம் மற்றும் சென்னை, ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் ஆகிய

இடங்களில் இந்த வசதிகள் உள்ளன.

அரியலூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி (அண்ணா விளையாட்டரங்கம் மற்றும் ஸ்ரீரங்கம்), திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை, திருவாரூர், விழுப்புரம், விருதுநகர், நீலகிரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த உள் விளையாட்டரங்கங்களில் இறகுபந்து, கூடைப்பந்து, வாள்சண்டை, கைப்பந்து, ஜூடோ, கபாடி, மேசைப்பந்து மற்றும் கையுந்துபந்து போன்ற விளையாட்டு வசதிகள் உள்ளன.

## 2.4 செயற்கை இழை ஆடுகளங்கள்

### 2.4.1 செயற்கை இழை தடகள ஓடுபாதைகள்

தமிழ்நாட்டில் 7 மாவட்டங்களில் 8 செயற்கை

இழை தடகள ஓடுபாதைகள் உள்ளன. சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் உள்ள பயிற்சி ஓடுதளப்பாதை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ளன.

சென்னையில் உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தில் செயற்கை இழை தடகள ஓடுபாதை 2023 கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியின் போது புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதைப்போன்று கோயம்புத்தூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்திலும் செயற்கை இழை தடகள ஓடுபாதை புதுப்பிக்கப்பட்டது.

கூடுதலாக, ஈரோடு மற்றும் தஞ்சாவூர் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் கேலோ இந்தியா விளையாட்டு உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ்

புதியதாக செயற்கை இழை தடகள ஓடுபாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

### 2.4.2 செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளங்கள்

தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களில், ஏழு செயற்கை இழை வளைகோல்பந்து மைதானங்கள் உள்ளன. அவற்றில், சென்னையில் மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து மைதானம் மற்றும் ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வி கல்லூரி வளாகம், மதுரை, கோவில்பட்டி (தூத்துக்குடி), இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளது.

### 2.4.3 செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள்

தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் மொத்தம் 35 செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் உள்ளன. சென்னையில் நுங்கம்பாக்கம், நேரு பூங்கா, முகப்பேர்

மற்றும் அரியலூர், கடலூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம், நீலகிரி, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர், புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் இவ்விளையாட்டு வசதிகள் உள்ளன.

## 2.5 நீச்சல் குளங்கள்

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில், 38 நீச்சல் குளங்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்நீச்சல் குளங்கள் அரியலூர், கடலூர், சென்னை (ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் உள்ள நீர் சிகிச்சை நீச்சல் குளம், வேளச்சேரியில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய AGB வளாகம், அண்ணா நீச்சல் குளம், முகப்பேரில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு வளாகம் மற்றும் ஷெனாய் நகர் நீச்சல் குளம்) தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம்,

நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சிராப்பள்ளி, அண்ணா விளையாட்டரங்கம், திருநெல்வேலி (மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்), திருவள்ளூர், தூத்துக்குடி, திருவாரூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைந்துள்ளன.

**2.6 உட்கட்டமைப்புகளை பராமரித்தல்**

தமிழ்நாடு அரசு, 2023–2024–ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பராமரிப்தற்காக ரூ.30.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 2.7 உடற்தகுதி மற்றும் விளையாட்டு மருத்துவத்திற்கான திட்டங்கள்

மாநிலத்தில் உள்ள விளையாட்டு வீரர்களின் நலனிற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டு அறிவியல் மையங்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்களை நிறுவி உள்ளது.

இந்த மையங்கள் சரியான ஊட்டச்சத்து, மிதமான மற்றும் தீவிரமான உடற்பயிற்சி, சரியான உடற்தகுதி மற்றும் நல்வாழ்வை அடைவதற்கு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றுவதையும், ஊக்குவிப்பதையும் குறிக்கோளாகக் கொண்டு விளையாட்டு பயிற்சி மற்றும் போட்டிகளின்போது காயமடைந்த விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான நிதி உதவி வழங்குகிறது.

### 2.7.1 மாநில விளையாட்டு ஊக்குவிப்பு மையம், சென்னை

தமிழ்நாடு மக்களிடையே சுகாதார

விழிப்புணர்வை மேம்படுத்தவும், விளையாட்டு வீரர்களின் செயல்திறனை உயர்த்தவும், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் மாநில விளையாட்டு ஊக்குவிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையம், மருத்துவம் மற்றும் பிசியோதெரபி போன்ற முதலுதவிக்கான உபகரணங்களை கொண்டு, தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மெருகேற்றுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

### 2.7.2 மதுரை மற்றும் நீலகிரியில் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) மதுரையில் 18.02.2024 அன்று தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் (ISSC) ஒன்றை அமைத்துள்ளது. இம்மையத்தின் முக்கிய நோக்கம், விளையாட்டு வீரர்கள் விளையாட்டு தொடர்பான காயங்கள் ஏற்படாமல்

தடுத்தல், காயங்களில் இருந்து மீள்வதற்கான சிகிச்சை அளித்தல் மற்றும் காயம்பட்ட விளையாட்டு வீரர்களின் உடல் தகுதியை மீட்டெடுத்தல், ஆகியவற்றின் மூலம் விளையாட்டு நடவடிக்கைகளை விரைவாக மீண்டும் தொடங்குவதற்கு உதவுதல் ஆகும். மேலும், இம்மையம் போதைப்பொருள் இல்லாத விளையாட்டு மற்றும் ஊக்கமருந்து எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது. மதுரையைப் போலவே நீலகிரியிலும் ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

## 2.8 தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உடற்பயிற்சிக் கூட வசதிகள்

தலைமைச் செயலகத்தின் ஆண் மற்றும் பெண் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு தனித்தனி உடற்பயிற்சிக் கூடங்களை அரசு ஏற்படுத்தி உள்ளது.

இந்த உடற்பயிற்சிக் கூடங்கள் பணியாளர்களிடையே அறிவுசார் திறன், தன்மதிப்பு, நம்பிக்கை மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொடர்ச்சியான உடற்பயிற்சி, மன அழுத்தம், மனச்சோர்வு மற்றும் பதட்டத்தைக் குறைக்கவும் உதவுகிறது. கூடுதலாக இது ஆற்றல், மனஉறுதி மற்றும் செயல்திறனை அதிகரிக்கிறது. ஏறக்குறைய 5,000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த வசதியினால் பயன்பெற்று வருகின்றனர்.

## 2.9 17 மாவட்டங்களில் நவீன உடற்பயிற்சி மையங்கள்

இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், தினசரி செயல்பாடுகளை ஊக்குவித்து உடல் எடையை பராமரிக்கவும், 17 மாவட்டங்களில் நவீன உடற்பயிற்சி மையங்களை தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது. சென்னை, கடலூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம்,

சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, நீலகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இந்த மையங்கள் செயல்படுகின்றன. இந்த உடற்பயிற்சி மையங்கள் மூலம் ஏராளமான பொதுமக்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் பயனடைந்து வருகின்றனர்.

**2.10 மாநிலத்தில் உள்ள விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) கட்டுப்பாட்டின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவான பட்டியல் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. பரந்த அளவிலான விரிவான விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் மையமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.

## படலம் – 3

## விளையாட்டு மேம்பாட்டுக்கான முக்கிய முயற்சிகள்

தேசிய அளவில் தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக மாற்றுவதில் அரசு தளராத அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. பல முயற்சிகள் மூலம், தமிழ்நாடு அதன் விளையாட்டு மரபு, விளையாட்டு நிகழ்வுகளின் வளமான வரலாறு, இளம் திறமைகளை வளர்ப்பதில் தொலைநோக்குடன் செயல்படுதல் மற்றும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பினை உருவாக்குதல் போன்றவற்றில் கவனம் செலுத்துகிறது.

முன் முயற்சிகள் :–

### 3.1 முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2023

பாரம்பரிய விளையாட்டுகளான கபாடி மற்றும் சிலம்பம் விளையாட்டுகள் உட்பட 15 விளையாட்டுப் போட்டிகளில் அனைத்து வகையான விளையாட்டு வீரர்களையும் இணைத்து முதலமைச்சர் கோப்பை

விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டிகள் பள்ளி, கல்லூரி மாணவ / மாணவிகள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலருக்கும் நடத்தப்பட்டன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் முதலில் மாவட்ட மற்றும் மண்டல அளவில் நடைபெற்றன. 2023–ல் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் 3,71,354 ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்கள் உற்சாகமாக மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டனர்.

2023 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்காக, பிரத்யேகமான இலட்சினை, சின்னம் மற்றும் கருப்பொருள் பாடல் ஆகியவை அறிமுகப்படுத்தி மறுவடிவமைப்பு செய்யப்பட்டது. இது தமிழகத்தின்

மூலை முடுக்கெல்லாம் சென்றடைந்தது.

**இலட்சினை:**

இலட்சினையில் "தமிழ்நாடு" என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. இது நமக்கும் நமது பாரம்பரியத்திற்கும் இடையே உள்ள தொடர்பை குறிக்கிறது. இதில் உள்ள பழுப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளை நிறங்கள் விளையாட்டு துறையின் பன்முகத்தன்மையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

**கருப்பொருள் பாடல்:**

தமிழகத்தின் ஒற்றுமை மற்றும் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் முதலமைச்சர் கோப்பையின் கருப்பொருள் பாடல் பல்வேறு இடங்களில் படமாக்கப்பட்டது. "களம் நமதே– இது நம்ம ஆட்டம்" என்ற கருப்பொருள் பாடல் மே 8, 2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு இந்த விளையாட்டின்

முக்கியத்துவத்தை அனைவருக்கும் எடுத்து காட்டியது.

**சின்னம்:**

முதலமைச்சர் கோப்பைக்கான சின்னமாக "வீரன்" தேர்ந்தெடுக்கப்பட்டது. வீரன் என்ற சொல் தமிழக மக்களின் வெல்ல முடியாத ஆற்றல் உணர்வின் அடையாளம் ஆகும். இந்த வீரன் சின்னமானது தமிழ்நாட்டின் மாநில விலங்கான "நீலகிரி வரையாட்டை" முன்மாதிரியாக கொண்டு உருவாக்கப்பட்டது.

மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளின் துவக்க விழா மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 30.06.2023 அன்று ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் துவக்கி வைக்கப்பட்டது.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய AGB வளாகம் வேளச்சேரி, மாவட்ட விளையாட்டு வளாகம் நேரு பூங்கா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், மெரினா கடற்கரை, இராமசந்திரா பல்கலைக்கழக விளையாட்டு வளாகம், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், குருநானக் கல்லூரி, சென்னை பல்கலைக் கழகம் மற்றும் புதூர் கிரிக்கெட் அகாடமி மற்றும் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூர் உட்பட நகரின் 17 இடங்களில் இறகுபந்து, மேசைபந்து, சிலம்பம், பளுதூக்குதல், நீச்சல், கூடைப்பந்து, கபாடி, சதுரங்கம், கையுந்துபந்து, வளைகோல்பந்து, கால்பந்து, தடகளம், கடற்கரை கையுந்துபந்து, டென்னிஸ், மட்டைப்பந்து

மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 30 ஜூன் 2023 முதல் 25 ஜூலை 2023 வரை நடைபெற்றது. மாவட்ட மற்றும் மண்டல அளவில் வெற்றி பெற்ற 27,000 விளையாட்டு வீரர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்று சாதனை படைத்துள்ளனர்.

**மாவட்ட அளவிலான தனிநபர் போட்டிகளுக்கான பரிசுத் தொகை:**

| தரவரிசை | தனிநபர் போட்டிகள் (ரூ.) | இரட்டையர் போட்டிகள் (ரூ.) |
|---|---|---|
| முதல் பரிசு | 3,000/- | 6,000/- |
| இரண்டாம் பரிசு | 2,000/- | 4,000/- |
| மூன்றாம் பரிசு | 1,000/- | 2,000/- |

**மாவட்ட அளவிலான குழு போட்டிகளுக்கான பரிசுத் தொகை:**

<table>
<tr><th>குழு விளையாட்டுப் போட்டிகள்</th><th>குழுவிற்கான முதல் பரிசு ரூ.</th><th>குழுவிற்கான இரண்டாம் பரிசு ரூ.</th><th>குழுவிற்கான மூன்றாம் பரிசு ரூ.</th></tr>
<tr><td>கால்பந்து</td><td rowspan="2">54,000/-</td><td rowspan="2">36,000/-</td><td rowspan="2">18,000/-</td></tr>
<tr><td>வளைகோல்பந்து</td></tr>
<tr><td>கூடைப்பந்து</td><td rowspan="3">36,000/-</td><td rowspan="3">24,000/-</td><td rowspan="3">12,000/-</td></tr>
<tr><td>கபாடி</td></tr>
<tr><td>கையுந்துபந்து</td></tr>
</table>

**மாநில அளவிலான தனிநபர் போட்டிகளுக்கான பரிசுத் தொகை:**

| போட்டிகள் | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) |
|---|---|---|---|
| தனிநபர் போட்டிகள் | 1,00,000/– | 75,000/– | 50,000/– |
| இரட்டையர் போட்டிகள் | 1,50,000/– | 1,12,500/– | 75,000/– |

**மாநில அளவிலான குழு போட்டிகளுக்கான பரிசுத் தொகை:**

| குழு விளையாட்டுப் போட்டிகள் | முதல் பரிசு ரூ. | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) |
|---|---|---|---|
| கபாடி | 6,00,000/– | 4,50,000/– | 3,00,000/– |
| கால்பந்து | 9,00,000/– | 6,75,000/– | 4,50,000/– |
| கையுந்துபந்து | 6,00,000/– | 4,50,000/– | 3,00,000/– |
| கூடைப்பந்து | 6,00,000/– | 4,50,000/– | 3,00,000/– |
| வளைகோல்பந்து | 9,00,000/– | 6,75,000/– | 4,50,000/– |
| கபாடி (செவித்திறன் குன்றியோர்) | 3,00,000/– | 2,25,000/– | 1,50,000/– |
| இறகுபந்து (உடற்திறன் குன்றியோர்) | 3,00,000/– | 2,25,000/– | 1,50,000/– |
| கையுந்துபந்து (பார்வைத்திறன் குன்றியோர்) | 3,00,000/– | 2,25,000/– | 1,50,000/– |
| எறிபந்து (மனவளர்ச்சி குன்றியோர்) | 3,00,000/– | 2,25,000/– | 1,50,000/– |

தமிழகத்தின் விளையாட்டு மரபு மற்றும் பெருமையை பறைசாற்றும் வகையில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்திட தமிழ்நாடு அரசு ரூ.50.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான போட்டிகள் 2023**

**பதக்கப்பட்டியல்**

| தரவரிசை | மாவட்டம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 61 | 33 | 19 | 113 |
| 2 | செங்கல்பட்டு | 18 | 19 | 18 | 55 |
| 3 | கோயம்புத்தூர் | 15 | 13 | 24 | 52 |
| 4 | திருவள்ளூர் | 11 | 11 | 10 | 32 |
| 5 | ஈரோடு | 10 | 6 | 8 | 24 |

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் 25.07.2023 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பதக்கப் பட்டியலில் முதல் மூன்று

இடங்களை வென்ற மாவட்டங்களான சென்னை, செங்கல்பட்டு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் 2023 ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

## 3.2 சென்னையில் அமைய உள்ள உலகத் தரத்திலான விளையாட்டு நகரம்

சென்னையில் உலகத் தரம் வாய்ந்த மைதானங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் சென்னையை உலக அளவிலான விளையாட்டு நகரமாக நிறுவி, உலகளாவிய போட்டிகளுக்கு சிறந்த இடமாகவும் விளையாட்டு வீரர்களுக்கு உயர் செயல்திறன் பயிற்சி மையமாகவும் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சர்வதேச தரத்திலான பல்நோக்கு

திறந்தவெளி மற்றும் உள் விளையாட்டு அரங்கங்கள், ஒலிம்பிக் தரத்திலான நீச்சல் குளம், விளையாட்டு அகாடமிகள் மற்றும் பயிற்சிப் பள்ளிகள், விளையாட்டு அறிவியல் வசதிகள், விளையாட்டு வீரர்களுக்கான விடுதிகள், விளையாட்டு மருத்துவ மையம் போன்ற வசதிகளை படிப்படியாக உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

உலக தரத்திலான விளையாட்டு நகர திட்டத்தின் நோக்கம், இணையற்ற உட்கட்டமைப்பின் மூலம் விளையாட்டு வீரர்கள், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். இந்த முயற்சி பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை ஈர்ப்பது மட்டுமல்லாமல், நாளைய தலைமுறை விளையாட்டு வீரர்களையும் ஈர்த்து சென்னையை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாகவும் மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. உலகத் தரத்திலான விளையாட்டு நகரம் அமைக்க

செம்மஞ்சேரியில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் செயல்படுத்தப்படும்.

### 3.3 ஒலிம்பிக் அகாடமிகள்

ஒலிம்பிக் அகாடமி உயர் செயல்திறன் கொண்ட விளையாட்டு வீரர்கள் வெற்றியை அடைவதற்கும் மற்றும் ஒலிம்பிக்கில் பதக்க மேடையை அடையத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே உட்கட்டமைப்பின் கீழ் வழங்கிட வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ஒலிம்பிக்கில் நமது மாநிலம் மற்றும் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த விரும்பும் சிறந்த விளையாட்டு வீரர்களின் திறமைகளை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. இந்த அகாடமியில் பல்வேறு ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான உலகத் தரம் வாய்ந்த பயிற்சி, அதிநவீன உட்கட்டமைப்பு, விளையாட்டு அறிவியல் மையம், உபகரணங்கள்

மற்றும் பிற அத்தியாவசிய வசதிகளை வழங்குகிறது. ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களை உருவாக்கும் குறிக்கோளுடன் மற்றும் சர்வதேச அரங்கை அலங்கரிக்க விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு பயிற்சி அளிப்பதே அகாடமியின் நோக்கமாகும். விரிவான பயிற்சி திட்டங்கள் மற்றும் அர்ப்பணிப்பு அணுகுமுறை மூலம் இந்திய விளையாட்டுகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதிலும் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குதிலும் தமிழ் நாட்டில் உள்ள ஒலிம்பிக் அகாடமிகள் முக்கிய பங்காற்றும். இந்த ஒலிம்பிக் அகாடமி சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

**I. ஒலிம்பிக் அகாடமி, சென்னை**

சென்னை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஜவஹர்லால் நேரு விளையாட்

டரங்கில் புதியதாக கட்டப்பட்டுள்ள மூன்று மாடி கட்டிடத்தில் ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்பட்டுள்ளது.

**II. ஒலிம்பிக் அகாடமி, திருச்சிராப்பள்ளி**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், எலந்தப்பட்டி ஊராட்சியில், 50 ஏக்கர் பரப்பளவில் ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்பட உள்ளது.

**III. ஒலிம்பிக் அகாடமி, மதுரை**

மதுரையில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் விளையாட்டரங்கத்தில், தற்போதைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி மதுரை ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்பட்டுள்ளது.

**IV. ஒலிம்பிக் அகாடமி, HADP திறந்தவெளி விளையாட்டரங்கம், உதகமண்டலம்**

நீலகிரி Breeks திறந்தவெளி விளையாட்டரங்கில், தற்போதுள்ள உட்கட்டமைப்பு

வசதிகளை மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் மேம்படுத்தி, ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்பட்டுள்ளது.

### 3.3.1 ஒலிம்பிக் தங்கத் தேடல்

ஒலிம்பிக் விளையாட்டுகள் என்பது ஒரு உலகளாவிய விளையாட்டுத் திட்டமாகும். இது உலகம் முழுவதும் உள்ள விளையாட்டு வீரர்களை பல்வேறு விளையாட்டுகளில் போட்டியிடுவதற்காக ஒன்றிணைக்கின்றது. ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்வது என்பது விளையாட்டில் உச்சபட்ச சாதனையாக கருதப்படுகிறது. மேலும், பல ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களின் கனவாக உள்ளது. பாரிஸ் 2024, லாஸ் ஏஞ்சல்ஸ் 2028 மற்றும் பிரிஸ்பேன் 2032–இல் நடைபெறவிருக்கும் கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் அடைவதற்கான சிறப்புத் திட்டத்தை தமிழ்நாடு இப்போது தொடங்கியுள்ளது.

### 3.3.2 வெளிநாட்டு பயிற்றுநர்கள் நியமனம்

தமிழ்நாட்டில் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளின் பயிற்சியின் தரத்தை உயர்த்திடும் நோக்கில் வெளிநாட்டு பயிற்றுநர்கள் பணியமர்த்தப்படுகின்றனர். தடகளம் (தாண்டுதல்), தடகளம் (குறுந்தூர ஓட்டம்), நீச்சல், வளைகோல் பந்து மற்றும் டென்னிஸ் போன்ற பல்வேறு விளையாட்டுகளில் வெளிநாட்டு பயிற்றுநர்களை நியமிப்பதை மாநில அரசு கொள்கையாக கொண்டுள்ளது. இந்த முன்முயற்சியானது விளையாட்டை ஊக்குவிப்பதையும், விளையாட்டு வீரர்கள் தங்கள் சிறந்த திறனை அடைய உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. வெளிநாட்டு பயிற்றுநர்களின் நியமனம் வெளிப்படைத் தன்மையுடன் செய்யப்படுகிறது. இதில் பயிற்றுநர்களின் அனுபவம், தகுதிகள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவை நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு மதிப்பீடு செய்யப்படும்.

பன்னாட்டு பயிற்றுநர்களை நியமிப்பதன் மூலம் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வதை இறுதி இலக்காகக் கொண்டுள்ள தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் இப்பகுதியில் விளையாட்டு கலாச்சாரத்தை உயர்த்துவதற்கும் வாய்ப்புள்ளது.

### 3.3.3 நிபுணத்துவ பயிற்றுநர்கள் நியமனம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் வளைகோல்பந்து, கபாடி, ஸ்குவாஷ், மேசைப்பந்து மற்றும் கையுந்துபந்து போன்ற பல்வேறு விளையாட்டுகளில் நிபுணத்துவம் வாய்ந்த 5 பயிற்றுநர்களை நியமித்துள்ளது. மேலும், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சியளிக்க ஒப்பந்த அடிப்படையில் 2 பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நிபுணத்துவ பயிற்றுநர்கள், மாநிலம் முழுவதும் உள்ள விளையாட்டு வீரர்களின் வளர்ச்சி,

முன்னேற்றத்திற்கான வழிமுறைகள், சிறந்த நிபுணத்துவம் மற்றும் வழிகாட்டுதலை வழங்குகின்றனர்.

**3.4 தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச மாநாடு (TASCON 2023)**

தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச மாநாடு (TASCON 2023) 2023-ம் ஆண்டு நவம்பர் 7 மற்றும் 8 ஆகிய இரண்டு நாட்கள் சென்னையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் இந்தியா, பிரிட்டன், நெதர்லாந்து, மலேசியா மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு அறிவியல் வல்லுனர்கள் உட்பட சுமார் 250 பிரதிநிதிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

## 3.5 HCL சைக்ளோத்தான்

ஹெச்.சி.எல் (HCL) சைக்ளோத்தான், இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்புடன் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலையில் 15.10.2023 அன்று 3 பிரிவுகளாக நடத்தப்பட்டது. இப்போட்டியில், 956 ஆண்கள் மற்றும் 169 பெண்கள் பங்கேற்றனர்.

## 3.6 தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை

அரசுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் இடையே தடையற்ற ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும், விளையாட்டையும், விளையாட்டு வீரர்களையும் மேம்படுத்துவதில் தொழில்நுட்ப நிறுவனங்கள் முனைப்புடன் செயல்படவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை என்ற நிறுவனம் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், விளையாட்டு வீரர்களுக்கு இதுநாள் வரை ரூ.8,83,58,217/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவி விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்களை வழங்குதல், உயர்நிலைப் போட்டிகளில் பங்கேற்க பயணப்படி வழங்குதல் உட்பட பல்வேறு வசதிகளுக்காக வழங்கப்பட்டு வருகிறது. மொத்தம் **397** பயனாளிகள் பயன்பெற்று **100** க்கும் மேற்பட்ட பதக்கங்களை பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டு போட்டிகளில் வென்றுள்ளனர்.

### 3.7 முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்

தமிழ்நாட்டில் இருக்கும் 234 சட்டமன்றத் தொகுதிகளில், அரசு ஏற்கனவே 61 தொகுதிகளில் பல்வகையான விளையாட்டரங்கங்களை அமைத்துள்ளது. இச்சிறு விளையாட்டரங்கில் தடகளம், கால்பந்து, கூடைப்பந்து, கையுந்துபந்து, கபாடி மற்றும் அந்தந்த பகுதிகளில் உள்ள பிரபலமான

விளையாட்டுகள் உட்பட குறைந்தபட்சம் ஐந்து முக்கிய விளையாட்டுக்களுக்கான மைதான வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் விளையாட்டு கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் மீதமுள்ள சட்டமன்றத் தொகுதி அளவில் சிறு விளையாட்டரங்கம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக கீழ்க்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் நிலம் தேர்வு செய்யப்பட்டு முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதியின் பெயர் | கிராமம் |
|---|---|---|---|
| 1. | சென்னை | கொளத்தூர் | அயனாவரம் |
| 2. | சென்னை | சேப்பாக்கம் | திருவல்லிக்கேணி |
| 3. | திருப்பத்தூர் | வாணியம்பாடி | நிம்மியம்பட்டு |
| 4. | திருப்பூர் | காங்கேயம் | சிவன்மலை |
| 5. | மதுரை | சோழவந்தான் | சின்னஇலந்தைகுளம் |
| 6. | தூத்துக்குடி | ஸ்ரீவைகுண்டம் | ஸ்ரீமூலக்கரை |

| வ. எண். | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதியின் பெயர் | கிராமம் |
|---|---|---|---|
| 7. | கன்னியாகுமரி | பத்மநாபபுரம் | கல்லடிமாமூடு |
| 8. | புதுக்கோட்டை | ஆலங்குடி | திருவரங்குளம் |
| 9. | சிவகங்கை | காரைக்குடி | கழனிவாசல் |

இவ்வாறாக, மீதமுள்ள ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் முதலமைச்சர் விளையாட்டரங்கங்கள் இல்லாத இடங்களில் நிலம் தேர்வு செய்யப்பட்டு, விரிவான செயல்திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு படிப்படியாக முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்படும்.

### 3.8 ஒடிசா விளையாட்டுத் துறையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

2023-ம் ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் ஒடிசா பயணத்தின்போது அவர் முன்னிலையில் ஒடிசாவின் விளையாட்டுத் துறைக்கும், தமிழ்நாடு விளையாட்டு

மேம்பாட்டு ஆணையத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இரு மாநிலங்களுக்கு இடையே விளையாட்டு துறையில் அறிவு மற்றும் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வதற்காகவும் இளம் திறனாளர்கள், பயிற்றுநர்கள், விளையாட்டு வீரர்கள், விளையாட்டு நிர்வாகிகள், விளையாட்டு விஞ்ஞானிகள் மற்றும் விளையாட்டு கட்டமைப்பு ஆகியவற்றை பரிமாற்றம் செய்யவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.

இரு மாநிலங்களும் விளையாட்டுகளில் செழுமையான பாரம்பரியம் மற்றும் பல்வேறு சர்வதேச நிகழ்வுகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய பல்வேறு குறிப்பிடத்தக்க விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, திறமைகளை அடையாளம் காணுதல், பயிற்சி அளித்தல்,

உட்கட்டமைப்பு மேம்பாடு, விளையாட்டு கலாச்சாரத்தை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு துறைகளில் இரு மாநிலங்களும் இணைந்து செயல்படும்.

இதனடிப்படையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் இயங்கி வரும் விளையாட்டு விடுதியினை சார்ந்த 12 சிறுவர்கள், 8 சிறுமியர்கள் மற்றும் 4 பயிற்றுநர்கள் 2023–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11–ம் தேதி முதல் 20–ஆம் தேதி வரை ஒடிசாவில் பளுதூக்குதல் விளையாட்டில் தீவிரப் பயிற்சி மேற்கொண்டனர்.

## 3.9 மணிப்பூர் விளையாட்டு வீரர்களுக்கான உதவி தொடர்பான விவரங்கள்

மணிப்பூர் மாநிலத்தில் நிலவிய மோதல் காரணமாக, அந்த மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தமிழகத்தில் விளையாட்டுப் பயிற்சி பெற்று வருகின்றனர். மணிப்பூர் மாநிலத்தில் இருந்து

அழைத்து வரப்பட்ட சுமார் 27 விளையாட்டு வீரர்களுக்கு (வாள்சண்டை மற்றும் குத்துச்சண்டை) சிறப்புப் பயிற்சி, உணவு, போக்குவரத்து மற்றும் தங்குமிடம் வழங்கப்பட்டது. இதற்கு ரூ.25,66,284/- தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**3.10 சுற்றுச்சூழலுக்கு உகந்த விளையாட்டு அரங்கம்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் உள்ள அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்கள், உள்விளையாட்டு அரங்கங்கள், சிறு விளையாட்டரங்கங்கள் மற்றும் இதர விளையாட்டு வளாகங்களில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழி பொருட்களை பயன்படுத்த தடைவிதித்து பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன.

கூடுதலாக, விளையாட்டு வீரர்கள் மற்றும் மைதானங்களுக்குள் நுழையும் பொதுமக்கள்,

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழியை தடுக்க கடுமையான சோதனைக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர். விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு அல்லாத நிகழ்வுகளின் போது ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழி பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. நெகிழி தண்ணீர் குடுவைகள், பைகள் மற்றும் நெகிழி சிப்பம் கட்டுதல் ஆகியவற்றை உபயோகப்படுத்துதல் தவிர்க்கப்படுகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மைதானத்தை சுற்றி மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## படலம்–4

## பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்

பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் உலகெங்கிலும் உள்ள தனிநபர்களை ஒன்றிணைக்கும் தளங்களாக செயல்படுகின்றன. மாநில சங்கங்கள் அல்லது தேசிய கூட்டமைப்பால் நடத்தப்படும் பன்னாட்டு வாகையர் போட்டிகளுக்கு நிதியுதவி வழங்குவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக திகழ்கிறது.

பின்வரும் முக்கிய சர்வதேச போட்டிகள் சென்னையில் நடத்தப்பட்டுள்ளன: –

### 4.1 44 வது ஃபிடே சதுரங்க ஒலிம்பியாட்

திறன்மிக்க சதுரங்க விளையாட்டு வீரர்களை உருவாக்கி, மதிப்புமிக்க சதுரங்கப் போட்டிகளை நடத்திய தனிச்சிறப்பு வாய்ந்த வரலாற்றைக் கொண்ட தமிழ்நாடு வளமான சதுரங்க பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.

இந்திய வரலாற்றில் முதல் முறையாக தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட 44வது சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டியில் 186 நாடுகளை சேர்ந்த 2,000–க்கும் மேற்பட்ட சதுரங்க வீரர்கள் பங்கேற்றனர். இந்த மதிப்புமிக்க நிகழ்வு தமிழ்நாட்டில் பல்லவர் கால சிற்பங்களுக்கு பெயர் பெற்ற வரலாற்று நகரமான மாமல்லபுரத்தில் 2022–ஆம் ஆண்டு ஜூலை 28–ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 10–ஆம் தேதி வரை நடைபெற்றது.

இந்த 44 வது ஃபிடே சதுரங்க ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டி தொன்மையான தமிழகப் பண்பாட்டை உலகிற்கு எடுத்துக்காட்டியதோடு மட்டுமல்லாமல், சர்வதேச சுற்றுலாவை தமிழகத்தில் மேம்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றியது. 44 வது ஃபிடே சதுரங்க ஒலிம்பியாட் போட்டி சென்னையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டதால், சென்னை மாநகரம்

உலகின் முன்னணி விளையாட்டு நகரமாக உருவாகியுள்ளது என்பதில் ஐயமில்லை.

சதுரங்க விளையாட்டுக்கு முக்கியத்துவம் வழங்கி, 44 வது ஃபிடே சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகளை தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நடத்தியதை அங்கீகரிக்கும் வகையில் ஐக்கிய அரபு நாடுகளிள் அல் ஐன் நகரில் அமைந்துள்ள ஆசிய சதுரங்க கூட்டமைப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு "ஆண்டின் சிறந்த மனிதர்" எனும் விருதினை வழங்கி கௌரவித்துள்ளது. இவ்விருது தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் சதுரங்க விளையாட்டை மேம்படுத்துவதில் தமிழ்நாட்டின் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது.

## 4.2 சர்வதேச மகளிர் டென்னிஸ் வாகையர் போட்டிகள் (WTA)

1997–ஆம் ஆண்டு சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி தொடங்கியதிலிருந்து பல ஆண்டுகளாக சர்வதேச டென்னிஸ் போட்டிகளை நடத்துவதில் சென்னைக்கு வரலாற்று சிறப்பு உண்டு. சர்வதேச மகளிர் டென்னிஸ் வாகையர் போட்டி 2022–ஆம் ஆண்டு செப்டம்பர் 12 முதல் 18 வரை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள SDAT டென்னிஸ் விளையாட்டரங்கில் நடத்தப்பட்டது. WTA–250 தொடரின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு அரசு இப்போட்டிகளை வெற்றிகரமாக நடத்திட ரூ.5.00 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

## 4.3 ஏடிபி சேலஞ்சர் டூர் – 2023 சென்னை ஓபன் சேலஞ்சர் 100

ஏடிபி சேலஞ்சர் டூர் சர்வதேச ஆண்கள் தொழில்முறை டென்னிஸ் போட்டிகளின் தொடர்களை உள்ளடக்கியது. 3 வது ஆண்டாக சென்னையில் 2023 பிப்ரவரி 13 முதல் 19 வரை

நடைபெற்ற சென்னை சேலஞ்சர் 100 டென்னிஸ் போட்டிகள், 2023–ஆம் ஆண்டின் ஏடிபி சேலஞ்சர் சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக அமைந்தது. சேலஞ்சர் டூர் நிகழ்வுகள் ஏடிபி சுற்றுப்பயணத்தின் இரண்டாவது பெரிய டென்னிஸ் போட்டியைக் குறிப்பிடுவதோடு, சர்வதேச தொழில்முறை டென்னிஸின் நுழைவு போட்டிகளாக ITF உலக டென்னிஸ் டூர் போட்டிகள் அமைகின்றன.

திறந்தவெளி விளையாட்டு மைதானங்களில் விளையாடிய சென்னை ஓபன் சேலஞ்சர் 100 ஒற்றையர் பிரிவில் 32 வீரர்களும், இரட்டையர் பிரிவில் 16 அணிகளும் பங்கேற்றன. இந்த போட்டிகள் இந்திய டென்னிஸ் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்துள்ளதுடன் உள்ளூர் வீரர்களுக்கு சர்வதேச அரங்கில் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்குகிறது.

இப்போட்டியின் போது, முன்னாள் டென்னிஸ் உலக சாம்பியன் திரு. ஜோர்ன் போர்க் அவர்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் புகழ்பெற்ற டென்னிஸ் வீரர் திரு. விஜய் அமிர்தராஜ் அவர்கள் உடன் தமிழ்நாட்டில் டென்னிஸ் விளையாட்டின் எதிர்கால வாய்ப்புகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

### 4.4 சர்வதேச அலைசறுக்கு லீக்போட்டி 2023

சர்வதேச அலைசறுக்கு லீக் போட்டி மாமல்லபுரத்தில் 2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 ஆம் தேதி முதல் 20–ம் தேதி வரை நடைபெற்றது. ஆஸ்திரேலியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து 200–க்கும் மேற்பட்ட முன்னணி வீரர்கள் இந்த போட்டியில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வை நடத்தியதன் மூலம் தமிழ்நாட்டை உலகளாவிய அலைசறுக்கு இடமாக உயர்த்தியது

மட்டுமல்லாமல், மலேசியா, இலங்கை, மாலத்தீவு மற்றும் தென்னாப்பிரிக்கா போன்ற பிற புகழ்பெற்ற அலைசறுக்கு இடங்களுக்கு மத்தியில் நம் தமிழ்நாட்டினை நிலைநிறுத்தியது.

அழகிய கடற்கரை மற்றும் சிறந்த அலைசறுக்குக்கான சூழலின் மூலம், தமிழ்நாடு உலகெங்கிலும் உள்ள அலைசறுக்கு வீரர்களின் கவனத்தை ஈர்த்தது. மேலும், நீர் விளையாட்டு ஆர்வலர்களுக்கான உயர்மட்ட இடமாக அதன் நற்பெயரை மேம்படுத்துகிறது.

### 4.5 ஆசிய ஆண்கள் வளைகோல்பந்து வாகையர் போட்டி–2023

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் ஆசிய ஆண்கள் வளைகோல்பந்து வாகையர் போட்டி –2023 சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கில் 2023 ஆகஸ்ட் 3 முதல் 12 வரை நடைபெற்றது. சென்னையில் 16 வருடங்களுக்கு பிறகு

நடைபெற்ற சர்வதேச அளவிலான வளைகோல்பந்து விளையாட்டுப் போட்டிகள் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்தது.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் தரத்திலான சுற்றுச்சூழலுக்கு உகந்த செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் நாட்டிலேயே முதன்முறையாக அமைக்கப்பட்டு இப்போட்டிகள் நடத்தப்பட்டது. இதன் முதன்மையான பார்வையாளர் மாடம் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர்கள் மாடம் என பெயரிடப்பட்டுள்ளது.

பன்னாட்டு அளவில் பாராட்டப்பட்ட யானை பாதுகாப்பு திட்டங்களில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டின் அதிகாரப்பூர்வ சின்னமாக பொம்மன் தேர்வு செய்யப்பட்டது இப்போட்டியின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளும் வளைகோல்பந்து

விளையாட்டினை அறியும் வண்ணம் கன்னியாகுமரியில் இருந்து சென்னைக்கு கொண்டுவரப்பட்ட பரிசுக்கோப்பை பயணமானது மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது மேலும் ஒரு சிறப்பான நிகழ்வாக அமைந்தது. போட்டிகளுக்கான LED தொலைக்காட்சி நேரலையுடன் கூடிய பிரத்தியேகமான ரசிகர் பகுதிகள் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டது. இந்த ரசிகர் பகுதிகள் மூலம் பெரிய எண்ணிக்கையிலான வளைகோல்பந்து ரசிகர்கள் போட்டிகளை கண்டு களித்தனர்.

ஆசியாவின் தரப்பட்டியலில் முதல் ஆறு இடங்களைப் பெற்ற இந்தியா, கொரியா குடியரசு, மலேசியா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சார்ந்த வளைகோல்பந்து அணிகள் இந்த பெருமைமிகு போட்டியில் கலந்து கொண்டன.

விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் இந்திய வளைகோல்பந்து அணி 4–3 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தி வெற்றி பெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வெற்றி பெற்ற இந்திய அணிக்கு ஆசிய ஆண்கள் வாகையர் கோப்பையினை வழங்கியதுடன் தமிழ்நாடு அரசின் சார்பில் விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.5 இலட்சமும், பயிற்றுநர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு தலா ரூ.2.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1.10 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்படும் என அறிவித்தார்.

### 4.6 சென்னை ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 4–வது ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023 போட்டிகளை சென்னையில் 2023–ஆம் ஆண்டு ஜூன் 13–ம் தேதி முதல் 17–ம் தேதி வரை நடத்தியது. இதில், இந்தியா உட்பட பல்வேறு கண்டங்களில்

இருந்து 8 நாடுகள் பங்கேற்றன. இந்தியா, ஆஸ்திரேலியா, கொலம்பியா, எகிப்து, ஹாங்காங் சீனா, ஜப்பான், மலேசியா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் கலந்து கொண்டன. இப்போட்டியின் நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோப்பையினை வழங்கினார்.

## 4.7 சென்னை சதுரங்கம் கிராண்ட் மாஸ்டர்–2023

2023–ஆம் ஆண்டில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சதுரங்க கூட்டமைப்புடன் இணைந்து மதிப்புமிக்க பன்னாட்டு அளவிலான சதுரங்க போட்டியை நடத்தியது. இந்த நிகழ்வு உலக அளவில் கவனத்தை ஈர்த்தது. உலக சதுரங்க வாகையர் போட்டியின் மிக இள வயதில் வெற்றி பெற்று சாதனை புரிந்த கிராண்ட் மாஸ்டர் திரு.டி.குகேஷ் இப்போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றதனால் கேண்டிடேட்ஸ் போட்டியில் விளையாடுவதற்கு தகுதிபெற்றார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழ்நாடு அரசு சார்பாக இப்போட்டிக்காக ரூ.1,27,00,000/–ஒதுக்கீடு செய்தது.

## 4.8. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023

6–வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023, தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் 2024–ஆம் ஆண்டு ஜனவரி 19–ம் தேதி முதல் 31–ம் தேதி வரை நடத்தப்பட்டது. தென்னிந்தியாவில் முதன்முறையாக கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் 18 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 5,630 விளையாட்டு வீரர்கள், 1,600–க்கும் மேற்பட்ட துணைப் பணியாளர்கள், 1,020–க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் 1,500–க்கும்

மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்றனர். 26 விளையாட்டுப் பிரிவுகளைக் கொண்ட இப்போட்டியில் தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் ஒரு காட்சி விளையாட்டாக சேர்க்கப்பட்டது.

**இலட்சினை மற்றும் சின்னம்**

திருக்குறள் நமது தேசத்தின் தலைசிறந்த இலக்கியப் படைப்புகளில் ஒன்றாக, வாழ்வின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி, தமிழ் இலக்கியத்தைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது திருக்குறள், இந்தியாவின் உண்மையான பொக்கிஷமான தமிழ் மொழியின் செழுமையை எடுத்துக்காட்டுகிறது. மனித நாகரீகத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பாக விளங்கும் இந்நூல், தமிழ் கலாச்சாரத்தில் ஆழமாக பதிந்துள்ள பகுத்தறிவு சிந்தனை மற்றும் அறிவியல் மனோபாவத்தை பிரதிபலிக்கிறது.

அறிவு மையமாக அறியப்படும் தமிழ்நாடு, இந்தியாவின் அறிவியல் சாதனைகளுக்கு மகத்தான பங்களிப்பை அளித்துள்ளது, குறிப்பிடத்தக்க விஞ்ஞானிகள் நமது விண்வெளித் திட்டத்திற்கு ஆதரவளித்து வருகின்றனர். எனவே 'எதிர்காலம் இங்கே' என்ற பொருத்தமான டேக் லைன் இணைக்கப்பட்டு, திருவள்ளுவர் உருவம் போட்டியின் இலட்சினையாக தேர்வு செய்யப்பட்டது.

வீர மங்கை வேலுநாச்சியார் ஆங்கிலேய காலனித்துவ ஆட்சிக்கு எதிராக போரை நடத்திய முதல் இந்திய ராணி ஆவார், அவர் இந்திய பெண்களின் வீரத்தையும் பெருமையையும் அடையாளப்படுத்தி, பெண் சக்தியின் வலிமையை வெளிப்படுத்துகிறார். அனைத்து களங்களிலும் பெண்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானது. வீர மங்கை ஒரு உத்வேகமான

அடையாளமாக அமைகிறது. பெண்களுக்கு சம வாய்ப்புகளை வழங்குவதற்கான உறுதிப்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் தேசத்தை முன்னேற்றுவதில் அவர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பின் காரணமாக அவரது உருவம் சின்னமாக பயன்படுத்தப்பட்டது.

இப்போட்டிக்கான ஜோதி "தமிழ்", தமிழ் மொழி மற்றும் தமிழ்நாட்டின் வளமான பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியின் விளம்பர நடவடிக்கைகளில் ஒன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அமைச்சரால் தொடங்கப்பட்ட 'கேன்டர் டூர்' ஆகும். இதற்காக அர்ப்பணிக்கப்பட்ட பிரத்தியேக விளம்பர வாகனங்கள் தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கேலோ இந்தியாவின் இலட்சினை

மற்றும் சின்னத்தின் தகவலையும் உணர்வையும் எடுத்துச் சென்றன.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள், 2023–இன் பிரமாண்டமான தொடக்க விழா 19 ஜனவரி 2024 அன்று சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதன் தொடக்க விழா மாண்புமிகு இந்தியப் பிரதமர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழகத்தின் ஒப்பற்ற, செழுமையான வரலாறு மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பிரமாண்டமான விழாவாக கொண்டாடப்பட்டது. நிறைவு விழா 31.01.2024 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது இதில் முதல் 3 அணிகளான மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்

விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், தமிழ்நாடு மற்றும் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் ஆகியோர் கோப்பைகளை வழங்கிப் பாராட்டினர்.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் – 2023 தமிழ்நாட்டின் விளையாட்டுத் திறமைக்கு மட்டுமல்லாமல் மிகப்பெரிய அளவிலான பல்நோக்கு விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கான மாநிலத்தின் திறன்களுக்கும் சான்றாக திகழ்கிறது.

இப்போட்டிகளில் சிறந்து விளங்கிய தமிழ்நாடு 38 தங்கம், 21 வெள்ளி மற்றும் 39 வெண்கலம் ஆக மொத்தம் 98 பதக்கங்களுடன் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகளில் முதன்முறையாக ஒட்டுமொத்த பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பெற்று சாதனை புரிந்தது.

| தமிழ்நாட்டின் பதக்கப்பட்டியல் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண். | விளையாட்டு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
| 1 | தடகளம் | 11 | 6 | 1 | 18 |
| 2 | இறகுபந்து | 1 | 0 | 1 | 2 |
| 3 | கூடைப்பந்து | 2 | 0 | 0 | 2 |
| 4 | குத்துச்சண்டை | 0 | 0 | 4 | 4 |
| 5 | மிதிவண்டி | 5 | 1 | 6 | 12 |
| 6 | வாள்சண்டை | 2 | 0 | 4 | 6 |
| 7 | ஜூடோ | 0 | 0 | 1 | 1 |
| 8 | கபாடி | 0 | 1 | 1 | 2 |
| 9 | களரிபயட்டு | 0 | 1 | 0 | 1 |
| 10 | மல்லர்கம்பம் | 0 | 2 | 1 | 3 |
| 11 | துப்பாக்கி சுடுதல் | 0 | 3 | 1 | 4 |
| 12 | ஸ்குவாஷ் | 3 | 0 | 4 | 7 |
| 13 | நீச்சல் | 4 | 3 | 7 | 14 |
| 14 | டென்னிஸ் | 4 | 0 | 2 | 6 |
| 15 | கையுந்துபந்து | 1 | 0 | 1 | 2 |
| 16 | பளுதூக்குதல் | 2 | 3 | 3 | 8 |
| 17 | யோகாசனம் | 3 | 1 | 2 | 6 |
| மொத்தம் | | 38 | 21 | 39 | 98 |

**போட்டிகள் நடைபெற்ற இடங்கள் குறித்த விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.**

| நகரம் | விளையாட்டு | இடம் |
|---|---|---|
| சென்னை | தடகளம் | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் |
| | கால்பந்து | சென்னை பல்கலைக்கழகம் |
| | | ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் |
| | | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் |
| | கபாடி | ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கம் |
| | கையுந்துபந்து | |
| | ஜூடோ | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் |
| | பளுதூக்குதல் | |
| | ஸ்குவாஷ் | நேரு பூங்கா விளையாட்டு வளாகம் |
| | வில்வித்தை | |
| | குத்துச்சண்டை | தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் |
| | இறகுபந்து | |
| | வாள்சண்டை | |
| | மேசைப்பந்து | |
| | மிதிவண்டி | |
| | ஜிம்னாஸ்டிக்ஸ் | SDAT AGB வளாகம், |
| | நீச்சல் | |
| | வளைகோல்பந்து | MRK வளைகோல்பந்து விளையாட்டரங்கம் |
| | டென்னிஸ் | SDAT டென்னிஸ் விளையாட்டரங்கம் |
| | துப்பாக்கி சுடுதல் | குருநானக் கல்லூரி |

| நகரம் | விளையாட்டு | இடம் |
|---|---|---|
| | மல்யுத்தம் | இராஜரத்தினம் விளையாட்டரங்கம் |
| | யோகாசனம் | |
| திருச்சி | மல்லர்கம்பம் | அண்ணா விளையாட்டடரங்கம், |
| | களரிபயட்டு | |
| மதுரை | கட்கா | MGR விளையாட்டரங்கம், |
| | கோ–கோ | |
| கோயம்புத்தூர் | கூடைப்பந்து | விளையாட்டரங்கம் PSG மருத்துவக் கல்லூரி |
| | தங்டா | |

இந்த தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதன் மூலம் தமிழ்நாடு மிகவும் விரும்பப்படும் இடமாக உருவெடுத்துள்ளது.

## படலம் – 5

## பிற விளையாட்டுப் போட்டிகள்

விளையாட்டுப் போட்டிகள் இளைஞர்களின் திறனை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கினை வகிப்பதுடன், கடின உழைப்பு, படைப்பாற்றல் மற்றும் அர்ப்பணிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமானது இன்றைய போட்டி சூழலுக்கு ஏற்றவாறு விளையாட்டு வீரர் / வீராங்கனைகளை உருவாக்க பல்வேறு போட்டிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

### 5.1 அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள்

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு

வருகின்றன. இப்போட்டிகள் 13 வயதிற்குட்பட்ட, 15 வயதிற்குட்பட்ட மற்றும் 17 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியருக்கு என மூன்று வயதுப் பிரிவுகளாக நடத்தப்படுகின்றன. 2023-2024 ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் 14.10.2023 அன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்தப்பட்டது. மாநிலம் முழுவதும் 15,833 நபர்கள் பங்கேற்றனர். அறிஞர் அண்ணா மிதிவண்டி போட்டிகள் நடத்திட தமிழ்நாடு அரசு ரூ.38.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

### 5.2 அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப் போட்டி

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், 2023-2024-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிவிப்பில், பொதுமக்களிடையே உடற்பயிற்சி கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் அறிஞர் அண்ணா மராத்தான்

ஓட்டம் தொடர்ந்து நடத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும் அறிஞர் அண்ணா மாரத்தான் ஓட்டம் பொது மக்களிடையே உடற்பயிற்சி கலாச்சாரத்தை வளர்ப்பதும், இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

மாரத்தான் ஓட்டப் போட்டிக்கு இணையான நெடுந்தூர ஓட்டப் போட்டி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 7.10.2023 அன்று 17–25 வயதுப் பிரிவில் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் 14,171 பேர் பங்கேற்றனர். அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப் போட்டிகளை நடத்திட அரசு ரூ.38.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

### 5.3 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வளைகோல்பந்து சுற்று போட்டி

தமிழ்நாட்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு

ஆணைய வளைகோல்பந்து சுற்று போட்டி தற்போது பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட செயற்கை இழை வளைகோல்பந்து மைதானங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னை (2), கோவில்பட்டி (தூத்துக்குடி மாவட்டம்), மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஏழு செயற்கை இழை வளைகோல்பந்து மைதானங்கள் இயங்கி வருகின்றன. வளைகோல்பந்து போட்டியின் மீது வீரர்களுக்கு ஆர்வத்தை வளர்ப்பதற்கும், செயற்கை இழை வளைகோல்பந்து மைதானத்தின் போட்டி அனுபவத்தை வழங்குவதற்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சாம்பியன்ஸ் கோப்பை வளைகோல்பந்து சுற்று போட்டிகளை மாவட்டம், மண்டலம் மற்றும் மாநில அளவில் நடத்துகிறது.

## 5.4 தமிழ்நாடு அகில இந்திய குடிமைப் பணி மற்றும் மத்திய அரசுப் பணி (TACS) அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

2019–2020 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அகில இந்திய குடிமைப் பணி மற்றும் மத்திய அரசுப் பணி (TACS) அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் இறகுபந்து (ஆண்கள் மற்றும் பெண்கள்), கிரிக்கெட் (ஆண்கள்) மற்றும் கால்பந்து (ஆண்கள்) ஆகிய விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகிறது. பணிபுரியும் தொழில் வல்லுநர்களிடையே விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் அவர்களின் செயல்திறன் மற்றும் திறன்களை மேம்படுத்துவதும் இதன் முதன்மை நோக்கமாகும். இம்முயற்சிகளை செயல்படுத்த அரசு ஆண்டுதோறும் தொடர் மானியமாக ரூ.26.43 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

2023–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அகில

இந்திய குடிமைப் பணி மற்றும் மத்திய அரசுப் பணி (TACS) அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

**5.5 அகில இந்திய குடிமைப் பணிப் போட்டிகள் (AICS)**

அகில இந்திய குடிமைப் பணி விளையாட்டுப் போட்டிகள் புதுதில்லியில் உள்ள மத்திய குடிமைப் பணிகள், கலாச்சார மற்றும் விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மேற்பார்வையில் பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் அரசுப் பணியாளர்களிடையே உடற்தகுதியை மேம்படுத்தவும், குழு மனப்பான்மையை வளர்க்கவும் உதவுகின்றன.

**5.6 மாவட்ட மற்றும் மாநில அளவிலான கேரம் போட்டிகள்**

தமிழ்நாடு கேரம் விளையாட்டில் ஒரு

வலிமையான சக்தியாக உருவெடுத்துள்ளது. அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி, ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மாவட்ட மற்றும் மாநில அளவிலான கேரம் போட்டிகள் ஆண்டுதோறும் மிக இளையோர் (5–ம் வகுப்பு வரை) மற்றும் இளையோர் (6 முதல் 12 ஆம் வகுப்பு வரை) என இரண்டு பிரிவுகளாக நடத்தப்படுகின்றது. கேரம் விளையாட்டில் மாணவர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் நோக்கில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

## 5.7 வெளிநாட்டில் மேம்பட்ட பயிற்சி மற்றும் போட்டிகளில் கலந்து கொள்ளுதல்

அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க அல்லது வெளிநாட்டில்

பயிற்சி பெறுவதற்காக விளையாட்டு வீரர்களுக்கு விமான பயணச் செலவிற்காக ரூ.30,000/- வரை நிதியுதவியினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அளிக்கிறது.

**5.8 ஊக்க மருந்து எதிர்ப்பு**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டின் செயல்திறனை அதிகரிக்க கூடிய ஊக்க மருந்துகள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட பொருட்களின் பயன்பாட்டை தீவிரமாக தடுப்பதன் மூலம் விளையாட்டில் நேர்மையையும், உண்மையையும் நிலை நிறுத்துகிறது. ஊக்க மருந்து எதிர்ப்பு நடவடிக்கைகள் விளையாட்டுகளில் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கும் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் சமமான விளையாட்டு தளத்தை வழங்குவதற்கும் இன்றியமையாதது. உலக ஊக்க மருந்து தடுப்பு முகமையின் (WADA) விதிமுறையுடன் இணைந்தும், தேசிய ஊக்க மருந்து

தடுப்பு முகமையுடன் (NADA) இணைந்தும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விரிவான ஊக்க மருந்து எதிர்ப்பு உத்திகளை செயல்படுத்தி வருகிறது.

## 5.9 மாநில விளையாட்டு சங்கங்கள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாநில விளையாட்டு சங்கங்களுக்கு பின்வரும் விதிமுறைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் பிரத்யேகமாக அங்கீகாரம் வழங்கி வருகிறது. இந்த அளவுகோல்கள் சங்கத்தின் அமைப்பு மற்றும் துணை விதிகள், குறிப்பாணை மற்றும் சங்கத்தின் சரத்துகள், முந்தைய மூன்று ஆண்டுகளுக்கான வருடாந்திர பொதுக்குழு கூட்டங்களின் குறிப்புகள், கடந்த மூன்று ஆண்டுகளுக்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள், தேசிய கூட்டமைப்பு, இந்திய ஒலிம்பிக் சங்கம், ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகளுக்கான இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு

அமைச்சகத்தால் முறையான அங்கீகாரம் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது.

ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் அங்கீகாரம், சங்கத்தால் நடத்தப்படும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளின் விவரங்களை சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல், அங்கீகரிக்கப்பட்ட மாவட்ட சங்கங்களின் விவரங்கள் மற்றும் விளையாட்டு மைதான விவரக்குறிப்புகள் உள்ளிட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவையும் பரிசீலிக்கப்படுகின்றன. குறிப்பாக, மாநிலத்தில் ஒரு விளையாட்டுப் பிரிவுக்கு ஒரு மாநில விளையாட்டு சங்கம் மட்டுமே அங்கீகரிக்கப்படும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தற்போது 39 சங்கங்களை அங்கீகரித்துள்ளது.

## 5.10 சென்னை நவீன விளையாட்டரங்கில் நடத்தப்படும் பல்வேறு பெருமைமிகு விளையாட்டுப் போட்டிகள்

சென்னையில் உள்ள நவீன விளையாட்டரங்கங்கள் முக்கிய விளையாட்டு மையங்களாக செயல்படுவதால் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதில் தமிழ்நாடு ஒரு குறிப்பிடத்தக்க மையமாக தன்னை உருவாக்கிக் கொண்டுள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிர்வகிக்கப்படும் அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி, மாநில விளையாட்டு சங்கங்கள் மற்றும் தேசிய கழகங்கள் பல மதிப்புமிக்க விளையாட்டுப் போட்டிகளை நடத்தியுள்ளன. இது விளையாட்டை உயர்ந்த அளவில் மேம்படுத்துவதில் மாநிலத்தின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது.

### 5.10.1 சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள்

சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் பல முக்கிய குறிப்பிடத்தக்க விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு உகந்த இடமாக உள்ளது. இங்கு 2023 அக்டோபர் முதல் 2024 மார்ச் வரையிலான காலகட்டத்தில் இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து போட்டி நடைபெற்றது. மேலும், தேசிய தடகள வாகையர் போட்டிகள் 2023 அக்டோபர் 19 மற்றும் 20 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

மேலும், 2023 ஏப்ரல் 2 முதல் மே 28 வரை அகில இந்திய குடிமைப் பணி மற்றும் மத்திய அரசுப் பணி (TACS) அலுவலர்களுக்கான கால்பந்து போட்டிகள் இவ்விளையட்டரங்கில் நடைபெற்றது. 2023 ஜூன் 30 முதல் ஜூலை 15 வரை முதலமைச்சர் கோப்பை மாநில போட்டிகள் மற்றும் 2024 ஜனவரி 19 முதல் 31 வரை

நடத்தப்பட்ட கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட போட்டிகள் இவ்விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதுபோன்று குறிப்பிடத்தக்க விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் முதன்மை விளையாட்டு அரங்கமாக திகழ்கிறது.

### 5.10.2 சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட போட்டிகள்

சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் ஆண்டு முழுவதும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்விளையாட்டரங்கில் 3x3 தேசிய கூடைப்பந்து வாகையர் போட்டிகள் 2023 செப்டம்பர் 20 முதல் 24 வரை நடைபெற்றது. 90 வது பில்லியர்ட்ஸ் & ஸ்னூக்கர்ஸ் வாகையர் போட்டிகள் 2023 நவம்பர் 17 முதல் டிசம்பர் 26 வரை நடைபெற்றது. 36–வது ஆண்கள் மற்றும் 32–வது பெண்கள் தேசிய அட்டயா பட்டயா வாகையர் போட்டிகள் 2023 நவம்பர் 26 முதல்

29 வரை நடைபெற்றது. மேலும், 2023 டிசம்பர் 19 முதல் 28 வரை புரோ கபாடி சுற்று போட்டிகள் சீசன் 10 மற்றும் 2024 பிப்ரவரி 11 முதல் மார்ச் 22 வரை பிரைம் கையுந்துபந்து சுற்று போட்டிகள் சீசன் 3 ஆகிய போட்டிகள் இவ்விளையாட்டரங்கில் நடைபெற்றன.

### 5.10.3 மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், சென்னை

சென்னை எழும்பூரில் உள்ள மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கில் 2023 ஏப்ரல் 15 மற்றும் 16 ஆகிய நாட்களில் முதல் பிரிவு வளைகோல்பந்து சுற்று வாகையர் விளையாட்டுப் போட்டிகள், 2023 ஜூலை 1 முதல் 25 வரை முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான வளைகோல்பந்து போட்டிகள், 2023 ஆகஸ்ட் 3 முதல் 12 வரை ஹீரோ ஆசிய வளைகோல்பந்து வாகையர் கோப்பை மற்றும் 2023 ஆகஸ்ட் 24 முதல் செப்டம்பர் 3 வரை

94–வது அகில இந்திய MCC முருகப்பா தங்கக் கோப்பை வளைகோல்பந்து போட்டிகள் ஆகியவை நடைபெற்றன.

மேலும், 2023 செப்டம்பர் 6 முதல் 9 வரை நாக் அவுட் வளைகோல்பந்து போட்டிகள் நடைபெற்றது. 2023 அக்டோபர் 17 முதல் 24 வரை முதல் தேசிய மிக இளையோர் தெற்கு மண்டல வளைகோல்பந்து வாகையர் விளையாட்டுப் போட்டிகள், 2023 நவம்பர் 17 முதல் 28 வரை 13–வது தேசிய சீனியர் ஆண்கள் வாகையர் போட்டிகள் மற்றும் 2024 ஜனவரி 21 முதல் 27 வரை 6–வது கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளும் தொடர்ச்சியாக நடைபெற்றதன் மூலம் இந்த விளையாட்டரங்கம் தமிழ்நாட்டில் வளைகோல்பந்து விளையாட்டிற்கான முதன்மை இடமாக திகழ்கிறது.

**5.10.4 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை**

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டரங்கில் 2023 ஜூலை 3 அன்று மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை டென்னிஸ் போட்டிகள் நடைபெற்றது. 2023 ஜூலை 31 அன்று AITA ஆண்கள் / பெண்கள் / சக்கர நாற்காலி போட்டிகள், 2023 ஜனவரி 27 அன்று கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் 2023 மற்றும் 2024 பிப்ரவரி 5 அன்று சென்னை ஓபன் ATP சேலஞ்சர் 2024 போன்ற குறிப்பிடத்தக்க பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

**5.10.5 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல், ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் இறகுப்பந்து (AGB) வளாகம், வேளச்சேரி, சென்னை**

சென்னை, வேளச்சேரியில் உள்ள தமிழ்நாடு

விளையாட்டு மேம்பாட்டு ஆணைய ஏஜிபி வளாகத்தில் 2023 ஜூன் 3 மற்றும் 4 ஆகிய நாட்களில் 76வது சீனியர் மாநில நீச்சல் வாகையர் விளையாட்டுப் போட்டிகள், 2023 ஜூலை 18 முதல் 22 வரை 39வது மிக இளையோர் மற்றும் 49வது இளையோர் தேசிய வாட்டர் போலோ மற்றும் டைவிங் போட்டிகள் 2023 ஜூலை 28 முதல் 30 வரை 39வது மிக இளையோர் மற்றும் 49வது இளையோர் தேசிய நீச்சல் வாகையர் போட்டிகள் நடைபெற்றன.

2023 நவம்பர் 25 மற்றும் 26 ஆகிய நாட்களில், இளையோர் மற்றும் மிக இளையோர் பிரிவுகளில் சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கான ஆர்ட்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ் மாநில வாகையர் போட்டிகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, 2023 ஜூலை 9 மற்றும் 10 ஆகிய நாட்களில் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை நீச்சல் போட்டிகள், 2024 ஜனவரி 19 முதல் 24 வரை 6வது கேலோ இந்தியா

**இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் (ஜிம்னாஸ்டிக்ஸ்) மற்றும் 2024 ஜனவரி 25 முதல் 31 வரை நீச்சல் போட்டிகளும் நடைபெற்றன.**

## படலம் – 6

## திறன் கண்டறிதல்

தமிழ்நாட்டில் திறமைமிக்க விளையாட்டு வீரர்களை கண்டறிந்து, வெற்றியாளர்களை உருவாக்குவதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முக்கிய பங்காற்றுகிறது. அடையாளம் காணப்பட்ட திறமைசாலிகளை சாம்பியன்களாக உருவாக்குவதற்கும், உயர்நிலைப் போட்டிகளில் பதக்கங்களை வெல்வதற்குத் தகுந்த பயிற்சிகளை வழங்குவதற்கும் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

i. உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டம்
ii. சிறப்பு அகாடமிகள்
iii. விளையாட்டு விடுதிக்கான தேர்வு (பள்ளி நிலை)
iv. சிறப்பு விளையாட்டு விடுதிக்கான தேர்வு (கல்லூரி நிலை)
v. முதன்மை நிலை விளையாட்டு மையத்திற்கான தேர்வு (பள்ளி நிலை)
vi. பல்வேறு பயிற்சி முகாம்களை நடத்துதல்

## 6.1 உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டம் (WBTSS)

தமிழ்நாடு அரசு, உலகத் திறனாளர்கள் கண்டறியும் புதுமையான திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தொடர் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இந்த தேர்வுகள் குழந்தைகளின் வேகம், சகிப்புத்தன்மை, வலிமை, வலுவான ஆற்றலின் வெளிப்பாடு மற்றும் சுறுசுறுப்பு நிலைகள் போன்ற உடலியக்க திறன்களை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 6.1.1 திறமைகளை கண்டறிதல்

பள்ளி அளவில் ஆரம்ப நிலையில் திறன் வாய்ந்த குழந்தைகளை கண்டறிய உடற்திறன் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. பள்ளிக் கல்வித்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன்

இணைந்து விளையாட்டுத் திறனாளர்களைக் கண்டறிவதை கண்காணிக்கிறது. பின்வரும் தொடர் தேர்வுகள் மூலம் மாணவ / மாணவியர்களின் உடல் இயக்க திறன்கள் அடையாளம் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | 50 மீ ஓட்டம் | வேகம் |
| 2. | மாணவியர்களுக்கான 600 மீ ஓட்டம் / மாணவர்களுக்கான 800 மீ ஓட்டம் | தாங்கும் ஆற்றல் |
| 3. | 4 கிலோ குண்டு எறிதல் | வலிமை |
| 4. | நின்ற நிலையில் நீளம் தாண்டுதல் | வெளிப்படுத்தும் திறன் |
| 5. | 6 x 10 மீ குறுந்தூர ஓட்டம் | சுறுசுறுப்பு |

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, பள்ளிகளில் நடத்தப்படும் உடற்திறன் தேர்வுகளில் 10, 9 அல்லது 8 மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி மாவட்ட அளவிலான போட்டிகளும், மண்டல அளவிலான போட்டிகளும் நடத்தப்படுகின்றன. இதில் முதல் 10 இடங்களைப் பெறுபவர்கள் ஆண்டுதோறும் ஏப்ரல் முதல் மே மாதங்களில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு

ஆணையத்தால் நடத்தப்படும் விளையாட்டு விடுதி தேர்வு மற்றும் சிறப்பு அகாடமிகளுக்கான தேர்வுகளில் கலந்து கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பு அகாடமிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுகிறார்கள். அந்தந்த விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு சிறப்பு விளையாட்டுப் பயிற்சி வழங்கப்படுகிறது.

## 6.2 விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு

தமிழ்நாடு அரசு விளையாட்டு வீரர்களின் முழுமையான வளர்ச்சிக்காகவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டங்களை வழங்குவதற்காக விளையாட்டு விடுதி, சிறப்பு நிலை விளையாட்டு விடுதி மற்றும் முதன்மை நிலை விளையாட்டு மையம் ஆகியவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வுகள் நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்பட்டு வருகின்றது.

விளையாட்டு விடுதிகளின் சேர்க்கைக்கான விண்ணப்பத்தினை விளையாட்டு வீரர்கள் இணையதளம் வழியாக சமர்ப்பிக்கப்பட்டு, மாவட்ட மற்றும் மாநில அளவில் இரண்டு கட்டங்களாக தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. சேர்க்கைக்கான அனைத்து நடவடிக்கைகளும் இணைய தளம் வழியாக மதிப்பீடு செய்து அதன் முடிவுகள் பொதுத் தளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது.

### 6.3 பல்வேறு பயிற்சி முகாம்களை நடத்துதல்

#### 6.3.1 கோடைக்கால பயிற்சி முகாம்

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு கோடைக்கால பயிற்சி முகாம்கள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த முகாம்கள் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் மாவட்டங்களில் உள்ள பிற பிரபலமான விளையாட்டுகளில் பயிற்சி வழங்குவதில் கவனம் செலுத்துகின்றன. தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள்

மற்றும் விளையாட்டு வல்லுநர்கள் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்தாண்டு பயிற்சி முகாம்கள் அயல்நாட்டு மற்றும் நிபுணத்துவ பயிற்றுநர்களது ஆலோசனைகளுடன் நடத்தப்பட்டது.

### 6.3.2 உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் கீழ் கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 5 நாட்களுக்கு உறைவிடமில்லா பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. இந்த பயிற்சி முகாம் குறிப்பாக 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் படிக்கும் திறமையான சிறுவர் சிறுமிகளுக்கானது. இந்த முகாம் உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் மூலம் அடையாளம் காணப்பட்டு தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வல்லுநர்கள் மூலம் முகாம்கள் நடத்தப்பட்டு பங்கேற்பாளர்களுக்கு அடிப்படை விளையாட்டு திறன்கள் கற்பிக்கப்படுகிறது.

### 6.3.3 மாவட்ட அளவிலான உறைவிட பயிற்சி முகாம்கள்

ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் கண்டறியப்பட்ட 60 (மாணவ / மாணவியர்கள்) திறனாளர்களுக்கு மாவட்ட அளவிலான உறைவிட பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. இம்முகாம் கோடை விடுமுறையில் 15 நாட்கள் தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வல்லுநர்கள் மூலம் முகாம்கள் நடத்தப்பட்டு, பங்கேற்பாளர்களுக்கு அடிப்படை விளையாட்டு திறன்கள் கற்பிக்கப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறப்பு வாய்ந்த அகாடமிகள் மற்றும் விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வுகளில் கலந்து கொள்ள பங்கேற்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### 6.3.4 திறனாளர்களை கண்டறியும் முகாம்

பகல் நேர பயிற்சி முகாம் திட்டம் மற்றும் வார இறுதி பயிற்சி முகாம் திட்டம் ஆகியவற்றை

இணைத்து "திறனாளர்களை கண்டறியும் முகாம்" திட்டத்தை அரசு 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. ஒவ்வொரு ஆண்டும் 14 வயதுக்குட்பட்ட 10 சிறுவர் / சிறுமிகள் ஒரு குறிப்பிட்ட விளையாட்டில் முறையான பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்முகாம்கள் 38 மாவட்டங்களிலும் 6 மாத காலத்திற்கு முறையான பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. பங்கேற்பாளர்களுக்கு முகாமின் போது பயணப்படி, உணவுப்படி, விளையாட்டு சீருடை மற்றும் பிற தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றன.

### 6.3.5 உடற்கல்வி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் / மாணவியர்களிடையே உடலியல் செயல்பாடுகளை ஊக்குவிப்பதில் உடற்கல்வி ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். புதிய

விளையாட்டுக்களில் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களின் திறமை மற்றும் அறிவை மேம்படுத்த புத்தாக்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. குறிப்பாக 40 வயதுக்குட்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்காக இப்புத்தாக்கப் பயிற்சி வகுப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### 6.3.6 "நீச்சல் கற்றுக் கொள்" திட்டம்


தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிர்வகிக்கப்படும் அனைத்து நீச்சல் குளங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் "நீச்சல் கற்றுக் கொள்" திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டம் ஆண்டுதோறும் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான கோடை காலங்களில் பல்வேறு பிரிவுகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அனைத்து தரப்பினருக்கும் நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் வீதம் 12 நாட்களுக்கு பயிற்சி

அளிக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் 28 மாவட்டங்களில் உள்ள 32 நீச்சல் குளங்களில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 8,842 நபர்கள் பயனடைந்தனர்.

## படலம் – 7

## திறன் மேம்பாடு

விளையாட்டுத் திறன் மேம்பாடு என்பது திறமை மிக்கவர்களைக் கண்டறிதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் மூலம் ஏற்படும் இயல்பான முன்னேற்றமாகும். தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் வெற்றிகளைப் பெறுவதற்கும், பதக்கங்களை வெல்வதற்கும் முறையான விளையாட்டுத் திறன் மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களை வளர்க்க, அரசு பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது. விளையாட்டு விடுதிகள், சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள், முதன்மை நிலை விளையாட்டு மையங்கள், சிறப்பு அகாடமிகள், உயர் செயல்திறன் மையங்கள், கேலோ இந்தியா மாவட்ட மையம் மற்றும் இந்திய விளையாட்டு ஆணைய மண்டல பயிற்சி மையம் ஆகியவை இம்முன்னெடுப்புகளில் அடங்கும்.



Tiruvallur
Chennai
Vellore
Ranipet
Kancheepuram
Krishnagiri
Tirupattur
Tiruvannamalai
Chengalpattu
Dharmapuri
Villupuram
Salem
Kallakurichi
Nilgiris
Erode
Cuddalore
Namakkal
Perambalur
Ariyalur
Mayiladuthurai
Tiruchirappalli
Coimbatore
Tiruppur
Karur
Thanjavur
Tiruvarur
Nagapattinam
Pudukkottai
Dindigul
Theni
Madurai
Sivaganga
Virudhunagar
Ramanathapuram
Tenkasi
Thoothukudi
Tirunelveli
Kanniyakumari
District Sports Complex - DSC
Center of Excellence - COE
Sports Hostel of Excellence - SHE
Sports Hostel - SH

## 7.1 விளையாட்டு விடுதிகள்

பள்ளி அளவில் விளையாட்டுத் திறமைகளை கண்டறிந்து வளர்க்கும் தளமாக, விளையாட்டு விடுதிகள் விளங்குகிறது. இவ்விடுதிகளில், தமிழ்நாட்டில் 7, 8, 9 மற்றும் 11–ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் மாவட்ட மற்றும் மாநில அளவிலான இரண்டடுக்கு தேர்வுகள் மூலம் சேர்க்கப்படுகின்றனர். அறிவியல் சார்ந்த பயிற்சிகள் அளிப்பதுடன், விளையாட்டு விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவுப்படியாக 320 நாட்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.250/– வீதமும், விளையாட்டு சீருடைகள், காலணிகள் வாங்க ஆண்டொன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.4,000/– வீதமும், விளையாட்டு உபகரணங்கள் வாங்க ரூ.1,000/– வீதமும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, மாநிலத்தில் செயல்பட்டு வரும் 27 விளையாட்டு விடுதிகளில் மொத்தமாக 1,925 மாணவ / மாணவியர்கள் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். விளையாட்டு விடுதிகள் மற்றும்

விளையாட்டுக்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

## <u>மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி</u>

| வ. எண் | விளையாட்டு விடுதியின் இடம் | விளையாட்டு |
|---|---|---|
| 1 | அரியலூர் | தடகளம், வளைகோல்பந்து மற்றும் கைப்பந்து |
| 2 | அரசு மேல்நிலைப் பள்ளி. புதூர், சென்னை | மட்டைப்பந்து |
| 3 | சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் | குத்துச்சண்டை, வாள்சண்டை மற்றும் ஜூடோ |
| 4 | கோயம்புத்தூர் | தடகளம், கூடைப்பந்து மற்றும் கையுந்துபந்து |
| 5 | கடலூர் | குத்துச்சண்டை, டேக்வாண்டோ மற்றும் மல்யுத்தம் |
| 6 | கிருஷ்ணகிரி | தடகளம், கால்பந்து, கைப்பந்து மற்றும் டேக்வாண்டோ |
| 7 | மதுரை | தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து மற்றும் கையுந்துபந்து |
| 8 | நெய்வேலி (என்எல்சி) | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 9 | இராமநாதபுரம் | தடகளம் மற்றும் வளைகோல்பந்து |
| 10 | சிவகங்கை | தடகளம், கபாடி மற்றும் கால்பந்து |

| வ. எண் | விளையாட்டு விடுதியின் இடம் | விளையாட்டு |
|---|---|---|
| 11 | தஞ்சாவூர் | தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல் |
| 13 | தூத்துக்குடி | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 14 | திருச்சிராப்பள்ளி | தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, வளைகோல்பந்து, ஸ்குவாஷ், டேக்வாண்டோ, கையுந்துபந்து மற்றும் வூஷு |
| 15 | திருநெல்வேலி | தடகளம், கூடைப்பந்து, குத்துச்சண்டை, ஹாக்கி, கைப்பந்து மற்றும் நீச்சல் |
| 16 | விழுப்புரம் | கைப்பந்து, கபாடி மற்றும் மல்லர்கம்பம் |
| 17 | தேனி | கூடைப்பந்து, கால்பந்து மற்றும் கபாடி |

## மாணவியருக்கான விளையாட்டு விடுதி

| வ. எண் | விளையாட்டு விடுதியின் இடம் | விளையாட்டு |
|---|---|---|
| 1. | சென்னை (ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம்) | குத்துச்சண்டை, வாள்சண்டை, ஜூடோ மற்றும் கையுந்துபந்து |
| 2. | தருமபுரி | கபாடி, டேக்வாண்டோ மற்றும் கையுந்துபந்து |
| 3. | திண்டுக்கல் | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 4. | ஈரோடு | தடகளம், கால்பந்து மற்றும் கையுந்துபந்து |
| 5. | நாகர்கோவில் | தடகளம், வாள்சண்டை, கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல் |
| 6. | நாமக்கல் | கால்பந்து மற்றும் கபாடி |
| 7. | பெரம்பலூர் | தடகளம், கைப்பந்து மற்றும் டேக்வாண்டோ |
| 8. | புதுக்கோட்டை | தடகளம், வளைகோல்பந்து மற்றும் பளுதூக்குதல் |
| 9. | திருவண்ணாமலை | தடகளம், கூடைப்பந்து, கைப்பந்து மற்றும் வளைகோல்பந்து |
| 10. | செல்வம் மேல்நிலைப் பள்ளி, நாமக்கல் | தடகளம் மற்றும் வாள்சண்டை |

## மாணவ, மாணவியர்க்கான விளையாட்டு விடுதி

| வ.எண். | விளையாட்டு விடுதியின் இடம் | விளையாட்டு |
|---|---|---|
| 1. | நீலகிரி | தடகளம் |

2024–2025 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விடுதி, முதன்மை நிலை விளையாட்டு மையம் மற்றும் சிறப்பு நிலை விளையாட்டு விடுதி மாணவ, மாணவிகள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதளம் வாயிலாக பெறப்பட்டது. மாநில அளவில் தேர்வுகள் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்ட மாணவ / மாணவிகள் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 7.2 சிறப்பு நிலை விளையாட்டு விடுதி

கல்லூரி மாணவர் / மாணவியர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்பு விளையாட்டு விடுதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேம்பட்ட விளையாட்டு பயிற்சிகளுடன், சத்தான உணவு மற்றும் பல்வேறு நிலைகளிலான போட்டிகளில் பங்கேற்க நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

அறிவியல் பூர்வமான பயிற்சிகள் அல்லாமல், சிறப்பு விளையாட்டு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு 320 நாட்களுக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு உணவுப்படி ரூ.250/- வீதமும், விளையாட்டுச் சீருடைகள், காலணிகள் வாங்க வருடத்திற்கு தலா ரூ.10,000/- வீதமும், விளையாட்டு உபகரணங்களுக்காக தலா ரூ.10,000/- வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள் 6 இடங்களில் செயல்பட்டு வருகின்றது. அவற்றிலுள்ள விளையாட்டுகளின் விவரம் பின்வருமாறு:

| வ.எண். | விடுதிகள் இடம் | விளையாட்டு |
|---|---|---|
| 1 | சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (ஆண்கள்), ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை | தடகளம் |
| | | கூடைப்பந்து |
| | | குத்துச்சண்டை |
| | | வாள்சண்டை |
| | | ஜூடோ |
| | | கையுந்துபந்து |
| | | பளுதூக்குதல் |

| வ.எண். | விடுதிகள் இடம் | விளையாட்டு |
|---|---|---|
| 2 | சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (ஆண்கள்), கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் | வளைகோல்பந்து |
| 3 | சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (பெண்கள்), JNIS சென்னை | தடகளம் |
| | | குத்துச்சண்டை |
| | | கூடைப்பந்து |
| | | கால்பந்து |
| | | ஜூடோ |
| | | கையுந்துபந்து |
| | | பளுதூக்குதல் |
| 4 | சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (ஆண்கள்), காட்பாடி, வேலூர் மாவட்டம் | கால்பந்து |
| | | கைப்பந்து |
| | | கபாடி |
| 5 | மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கம், சென்னை (பெண்கள்) | வளைகோல்பந்து |
| 6 | காஞ்சிபுரம் (பெண்கள்) | கபாடி |
| | | கைப்பந்து |

2024–2025 ஆம் ஆண்டிற்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி மாணவ, மாணவிகள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதளம்

வாயிலாக பெறப்பட்டது. மாநில அளவிலான தேர்வுகள் சென்னையில் நடைபெற்று, சிறப்பு நிலை விளையாட்டு விடுதியில் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ / மாணவிகள் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 7.3 முதன்மை நிலை விளையாட்டு மையம்

பல்வேறு விளையாட்டுகளில் சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கு முறையான மற்றும் அறிவியல் பூர்வான பயிற்சி, சத்தான உணவு மற்றும் விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மேம்படுத்த தேவையான அனைத்து வசதிகளையும் முதன்மை நிலை விளையாட்டு மையம் வழங்குகிறது.

அறிவியல் பூர்வமான பயிற்சிகள் அல்லாமல், முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு 320 நாட்களுக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு உணவுப்படி ரூ.250/– வீதமும், விளையாட்டு சீருடைகள் மற்றும்

காலணிகளுக்காக தலா ரூ.10,000/– வீதமும், விளையாட்டு உபகரணங்களுக்காக தலா ரூ.10,000/– வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

முதன்மை நிலை விளையாட்டு மையங்களின் பட்டியல் மற்றும் விளையாட்டுகள் பின்வருமாறு:

| வ.எண். | விடுதிகள் இடம் | விளையாட்டு |
|---|---|---|
| 1. | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை (ஆண்கள்) | தடகளம் |
| 2. | ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம், சென்னை (பெண்கள்) | தடகளம் |
| 3. | SDAT AGB வளாகம், வேளச்சேரி, சென்னை (ஆண்கள் மற்றும் பெண்கள்) | ஜிம்னாஸ்டிக்ஸ் |
| | | நீச்சல் |
| 4. | SDAT டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை (பெண்கள்) | டென்னிஸ் |
| 5. | சத்துவாச்சாரி, வேலூர் (ஆண்கள்) | பளுதூக்குதல் |

| வ.எண். | விடுதிகள் இடம் | விளையாட்டு |
|---|---|---|
| 6. | தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூர் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | இறகுப்பந்து |
| | | மிதிவண்டி ஓட்டுதல் |
| | | மேசைப்பந்து |
| | | வில்வித்தை (ஆண்கள்) |

2024–2025 ஆம் ஆண்டிற்கான முதன்மை நிலை விளையாட்டு மையத்திற்கான சேர்க்கை தொடர்பான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு மாநில அளவிலான தேர்வுகள் சென்னையில் நடைபெற்றது. முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் தகுதியின் அடிப்படையில் மாணவ / மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, உரிய முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 7.4 கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு விடுதிகளில் உள்ள மாணவ / மாணவியர்கள் வென்ற பதக்கங்களின் விவரம்:

சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர்

ஆகிய நகரங்களில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு விடுதி மாணவ / மாணவியர்கள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுள்ளனர். மொத்தம் 5 தங்கம், 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை அவர்கள் வென்றுள்ளனர்.

**7.5 சிறப்பு விளையாட்டு அகாடமிகள்**

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சிறப்பு அகாடமிகளை அரசு அமைத்துள்ளது. உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் தேர்வுகளில் 6, 7 மற்றும் 8–ஆம் வகுப்புகளைச் சேர்ந்த மாணவ / மாணவியர்கள் 10 மதிப்பெண்களுக்கு 10, 9 மற்றும் 8 மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியர்களின் திறமைகளின் அடிப்படையில் வல்லுநர்கள் தலைமையிலான தேர்வுப் போட்டிகளின் மூலம் இச்சிறப்பு விளையாட்டு அகாடமிகளில் சேர்ந்து

கொள்ள தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தேர்வு செய்யப்பட்ட மாணவ / மாணவியர்கள் உரிய விளையாட்டுகளில் அனுபவமிக்க பயிற்றுநர்கள் மற்றும் சர்வதேச வீரர்களிடமிருந்து அறிவியல் சார்ந்த விளையாட்டுப் பயிற்சிகளைப் பெறுகின்றனர்.

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் சிறப்பு அகாடமிகள்:**

| வ. எண். | அகாடமியின் பெயர் | இடம் |
|---|---|---|
| 1. | குறுந்தூர ஓட்டம் மற்றும் தாண்டுதல் அகாடமி | மதுரை |
| 2. | எறிதல் அகாடமி | திருச்சிராப்பள்ளி |
| 3. | மிததூர ஓட்டம் அகாடமி | திருவண்ணாமலை |
| 4. | நெடுந்தூர ஓட்டம் அகாடமி | |
| 5. | சிறுவர்களுக்கான கால்பந்து அகாடமி | நாகப்பட்டினம் |
| 6. | சிறுமியர்களுக்கான கால்பந்து அகாடமி | திண்டுக்கல் |
| 7. | சிறுவர்கள் மற்றும் சிறுமியர்களுக்கான டைவிங் அகாடமி | சென்னை |
| 8. | சிறுவர்கள் மற்றும் சிறுமியர்களுக்கான வளைகோல்பந்து அகாடமி | சென்னை |

| வ. எண். | அகாடமியின் பெயர் | இடம் |
|---|---|---|
| 9. | மேசைப்பந்து அகாடமி | மதுரை |
| 10 | ஏ.கே.ஜி. மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 11 | தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமி | சென்னை |

இந்த அகாடமிகளின் மூலம் சுமார் 1300 விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## 7.6 ஜிம்னாஸ்டிக்ஸ் மையம், ஈரோடு மாவட்டம்

பாரம்பரியமாக கழைக்கூத்து சமூகத்தினரிடையே உள்ள ஜிம்னாஸ்டிக் திறனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ஈரோடு மாவட்டம், கரட்டுப்பாளையத்தில் ஜிம்னாஸ்டிக்ஸ் மையத்தை அரசு அமைத்துள்ளது. இந்த மையம் ஜிம்னாஸ்டிக்ஸில் அறிவியல்பூர்வமான பயிற்சிகளுடன் சத்தான உணவு மற்றும் பல்வேறு போட்டிகளில் பங்கேற்க வாய்ப்புகளை வழங்குவதன்

மூலம் பங்கேற்பாளர்கள் உரிய விளையாட்டுப் பிரிவுகளில் சிறந்து விளங்க உதவுகிறது.

அரசாணை (நிலை) எண்.60, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்.2) துறை, நாள் 17.08.2023 மூலம் ஈரோடு மாவட்டம், கரட்டுப்பாளையத்தில் உள்ள சிறப்பு ஜிம்னாஸ்டிக்ஸ் மேம்பாட்டு மையத்தில் பழங்குடியின சமூகத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு விளையாட்டு விடுதி மற்றும் புதிய ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டரங்கம் அமைக்க ரூ.1,00,00,000/- நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 7.7 உயர் செயல்திறன் மையம்

#### 7.7.1 மலை மேலிட பயிற்சி மையம்

மலை மேலிடத்தில் பயிற்சி பெறுவதன் மூலம் விளையாட்டு வீரர்களின் ஆற்றல் அதிகரிப்பதுடன் செயல்திறன் மேம்பட உதவுகிறது. மேலும், மலைப்பகுதிகளில் நடைபெறும் போட்டிகளுக்கு மலை

மேலிடத்தில் பயிற்சிகள் மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் ஏற்படுகிறது. இதை உணர்ந்து, உதகமண்டலத்தில் மலை மேலிட பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தனித்துவமான திட்டத்தின் மூலம் விளையாட்டு வீரர்களுக்கு ஆண்டு முழுவதும் பயிற்சி பெறுவதோடு, அவர்களின் செயல்திறனை மேம்படுத்த சிறந்த சூழலை வழங்குகிறது.

இவ்வாண்டு, இம்மலை மேலிட பயிற்சி மையத்தில், இந்திய விளையாட்டு ஆணையத்தின் தேசிய மற்றும் பன்னாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தினர்.

### 7.7.2 பாய்மரப் படகோட்டுதல் அகாடமி

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்ல வாய்ப்புள்ள விளையாட்டாக பாய்மரப் படகோட்டுதல் விளையாட்டு உள்ளதாலும், தமிழ்நாட்டில் 1,087 கி.மீ.

தூரம் பரந்து விரிந்த கடற்கரை அமையப் பெற்றுள்ளதாலும், பாய்மரப் படகோட்டுதலுக்கான அகாடமி சென்னையில் அமைத்திட அரசு ரூ.700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வசதி அமைக்கப்படும் பட்சத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த பாய்மரப் படகோட்டுதல் வீரர்கள் / வீராங்கனைகளுக்கு குறிப்பிடத்தக்க உத்வேகம் அளிக்கக் கூடிய வாய்ப்பாக அமையும். 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்த 3 பாய்மரப் படகோட்டுதல் வீரர் / வீராங்கனைகள் இந்தியாவின் சார்பாக பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. முந்தைய ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற தமிழக வீராங்கனை செல்வி. நேத்ரா குமணன் 2024 பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

### 7.7.3 கேனோயிங் மற்றும் கயாக்கிங்கிற்கான முதன்மை நிலை மையம்

கேனோயிங் மற்றும் கயாக்கிங் ஆகியவை ஒலிம்பிக் பதக்க வாய்ப்புகளைக் கொண்ட நீர் விளையாட்டாகும். இவ்விளையாட்டுக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், இளம் திறன்மிக்கவர்களை ஈர்க்கவும், மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகில் கேனோயிங் மற்றும் கயாக்கிங் விளையாட்டிற்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்க அரசு ரூ.258.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 7.8 கேலோ இந்தியா மாவட்ட மையம்

இந்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் உள்ள விளையாட்டுத் துறை, கேலோ இந்தியா திட்டத்தின் கீழ்,

நாடு முழுவதும் படிப்படியாக கேலோ இந்தியா மையங்களை மாவட்ட அளவில் நிறுவுவதற்கான முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.

இந்த முன்னெடுப்பின் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் 37 கேலோ இந்தியா மாவட்ட மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் முறையான பயிற்சி அளிக்க தலைச்சிறந்த முன்னாள் விளையாட்டு வீரர்கள் பயிற்றுநர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் கேலோ இந்தியா மாநில முதன்மை நிலை மையம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முன்னெடுப்பு, மாநிலத்தின் ஒட்டுமொத்த விளையாட்டு சூழலமைப்பை ஒருங்கிணைத்து இளைஞர்களுக்கு எண்ணற்ற வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கேலோ இந்தியா மையங்களில் பட்டியல் பின்வருமாறு:–

| வ. எண். | கேலோ இந்தியா மையம் – மாவட்டம் | விளையாட்டு |
|---|---|---|
| 1. | அரியலூர் | வளைகோல்பந்து |
| 2. | செங்கல்பட்டு | வாள்சண்டை |
| 3. | கோயம்புத்தூர் | கால்பந்து |
| 4. | கடலூர் | கால்பந்து |
| 5. | தருமபுரி | தடகளம் |
| 6. | திண்டுக்கல் | கால்பந்து |
| 7. | ஈரோடு | கூடைப்பந்து |
| 8. | கள்ளக்குறிச்சி | கபாடி |
| 9. | காஞ்சிபுரம் | ஜூடோ |
| 10. | கன்னியாகுமரி | தடகளம் |
| 11. | கரூர் | ஜூடோ |
| 12. | கிருஷ்ணகிரி | தடகளம் |
| 13. | மதுரை | வளைகோல்பந்து |
| 14. | மயிலாடுதுறை | பளுதூக்குதல் |
| 15. | நாகப்பட்டினம் | கையுந்துபந்து |
| 16. | நாமக்கல் | கையுந்துபந்து |
| 17. | பெரம்பலூர் | தடகளம் |
| 18. | புதுக்கோட்டை | குத்துச்சண்டை |
| 19. | இராமநாதபுரம் | ஜூடோ |
| 20. | ராணிப்பேட்டை | கையுந்துபந்து |
| 21. | சேலம் | குத்துச்சண்டை |
| 22. | சிவகங்கை | கோ – கோ |
| 23. | தென்காசி | பளுதூக்குதல் |
| 24. | தஞ்சாவூர் | பளுதூக்குதல் |
| 25. | நீலகிரி | வளைகோல்பந்து |

| வ. எண். | கேலோ இந்தியா மையம் – மாவட்டம் | விளையாட்டு |
|---|---|---|
| 26. | தேனி | கபாடி |
| 27. | திருநெல்வேலி | நீச்சல் |
| 28. | திருப்பத்தூர் | கால்பந்து |
| 29. | திருப்பூர் | தடகளம் |
| 30. | திருவள்ளூர் | கால்பந்து |
| 31. | திருவண்ணாமலை | நீச்சல் |
| 32. | திருவாரூர் | கையுந்துபந்து |
| 33. | தூத்துக்குடி | கையுந்துபந்து |
| 34. | திருச்சி | மல்யுத்தம் |
| 35. | வேலூர் | கால்பந்து |
| 36. | விழுப்புரம் | மல்லர்கம்பம் |
| 37. | விருதுநகர் | வளைகோல்பந்து |

## 7.9 இந்திய விளையாட்டு ஆணைய பயிற்சி மையம் (SAI)

தமிழ்நாட்டில் பல்வேறு விளையாட்டுக்களில் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக மயிலாடுதுறை, சேலம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் இந்திய விளையாட்டு ஆணைய மண்டல பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்திய விளையாட்டு ஆணையப் பயிற்சி மையம் திட்டத்தின் கீழ், 10–18 வயதுக்குட்பட்ட இளம் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளை கண்டறிந்து அவர்களை தொடக்க நிலையிலிருந்து தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்திய விளையாட்டு ஆணைய மையங்களை நிறுவி தொடர்ந்து நடத்துவதற்காக, தமிழ்நாடு அரசு அனைத்து விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை வழங்குவதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர் / வீராங்கனைகளுக்கு உணவு, தங்குமிடம், அறிவியல் சார்ந்த பயிற்சி, உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பின் பராமரிப்பு பணிகள் ஆகியவற்றை இந்திய விளையாட்டு ஆணையம் வழங்குகிறது.

## படலம் – 8

## விளையாட்டுச் சாதனைகள்

சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஒன்றிணைவதற்காகவும், ஒற்றுமை மற்றும் நட்பினை வளர்த்திட ஏதுவான தளமாக செயல்பட்டு வருகிறது. இந்த நிகழ்வுகள் கலாச்சார பரிமாற்றம் மற்றும் புரிதலை ஊக்குவிப்பதுடன் எல்லைகளை கடந்து செயல்பட உதவுகிறது.

சர்வதேச போட்டிகளில் உயர்மட்ட விளையாட்டு வீரர்களின் செயல்திறன், அனைத்து வயதினருக்கும் தங்களது விளையாட்டு இலக்குகள் மற்றும் கனவுகளைத் தொடர உத்வேகம் அளிக்கிறது. தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் உந்துசக்தியின் ஆதாரங்களாகவும், கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றின் முன்மாதிரிகளாக விளங்குகிறார்கள்.

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியடைதல் என்பது நாட்டின் குடிமக்களிடையே தேசிய பெருமித உணர்வை ஏற்படுத்துகிறது. விளையாட்டின் சாதனைகள் மக்களிடையே சிறப்பான மற்றும் சாதனையின் அடையாளங்களாக வலுவாக எதிரொலிக்கின்றது. மாநிலத்தின் விளையாட்டு சமூகத்தின் திறன் மற்றும் அர்ப்பணிப்பினை வெளிக்கொணர்ந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த பல சிறப்புமிக்க விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

## 8.1 மதிப்புமிக்க உயரிய விருது, 2023–2024

| வ. எண் | பெயர் | விளையாட்டு | விருதின் பெயர் |
|---|---|---|---|
| 1. | செல்வி. ஜோஷ்னா சின்னப்பா | ஸ்குவாஷ் | பத்மஸ்ரீ விருது |
| 2. | திருமதி. கவிதா செல்வராஜ் (வாழ்நாள் சாதனையாளர்) | கபாடி | தயான் சந்த் விருது |

| வ. எண் | பெயர் | விளையாட்டு | விருதின் பெயர் |
|---|---|---|---|
| 3. | திரு. ஆர். பி. ரமேஷ் (பயிற்சியில் சிறந்தவர்) | சதுரங்கம் | துரோணாச்சார்யா விருது |
| 4 | செல்வி.ஆர்.வைஷாலி (விளையாட்டில் சிறந்தவர்) | சதுரங்கம் | அர்ஜுனா விருது |

## 8.2 பாரீஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள்

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இரண்டு முறை வாகையர் பட்டம் வென்றவரும், பத்மஸ்ரீ மற்றும் கேல் ரத்னா விருது பெற்றவருமான தமிழ்நாட்டைச் சேர்ந்த மேசைப்பந்து விளையாட்டு வீரர் திரு. ஏ. சரத் கமல் அவர்கள் 2024 ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரை பாரீஸில் நடைபெறவுள்ள கோடை கால ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியக் கொடியை ஏந்திச் செல்லும் பெருமையைப் பெற்றுள்ளார்.

2024–ஆம் ஆண்டு பாரீஸில் நடைபெறவுள்ள கோடை கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க தமிழ்நாட்டைச் சேர்ந்த கீழ்க்காணும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் தகுதி பெற்றுள்ளனர்.

| வ. எண். | பெயர் | விளையாட்டுகள் | பிரிவுகள் |
|---|---|---|---|
| 1. | சுபா வெங்கடேசன் | தடகளம் | 4x400 மீ தொடர் ஓட்டம் (மகளிர்) |
| 2. | எஸ். ஆரோக்கிய ராஜீவ் | தடகளம் | 4x400 மீ தொடர் ஓட்டம் (ஆடவர்) |
| 3. | ராஜேஷ் ரமேஷ் | தடகளம் | 4x400 மீ தொடர் ஓட்டம் (ஆடவர்) |
| 4. | வித்யா ராமராஜ் | தடகளம் | 4x400 மீ தொடர் ஓட்டம் (மகளிர்) |
| 5. | நேத்ரா குமணன் | பாய்மரப் படகோட்டுதல் | பெண்கள் டிங்கி (ஐ.எல்.சி.ஏ 6) |
| 6. | பிரித்விராஜ் தொண்டைமான் | துப்பாக்கி சுடுதல் | டிராப் (ஆடவர்) |
| 7. | ஏ. சரத் கமல் | மேசைப்பந்து | ஆடவர் குழு மற்றும் ஆடவர் ஒற்றையர் |
| 8. | ஜி. சத்தியன் | மேசைப்பந்து | ஆடவர் குழு |
| 9. | என். ஸ்ரீராம் பாலாஜி | டென்னிஸ் | ஆடவர் இரட்டையர் |

## 8.3 2024 பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற பாரா விளையாட்டு வீரர் / வீராங்கனைகள்

| வ. எண். | பெயர் | விளையாட்டுகள் | பிரிவுகள் |
|---|---|---|---|
| 1. | த. மாரியப்பன் | பாரா தடகளம் | உயரம் தாண்டுதல் |
| 2. | மனிஷா ராமதாஸ் | பாரா இறகுபந்து | பெண்கள் ஒற்றையர் SU5 |
| 3. | துளசிமதி முருகேசன் | பாரா இறகுபந்து | பெண்கள் ஒற்றையர் SU5 மற்றும் கலப்பு இரட்டையர் SL3–SU5 |
| 4. | சிவராஜன் சோலைமலை | பாரா இறகுபந்து | ஆண்கள் ஒற்றையர் SH6 மற்றும் கலப்பு இரட்டையர் SH6 |
| 5 | நித்ய ஸ்ரீ | பாரா இறகுபந்து | பெண்கள் ஒற்றையர் SH6 மற்றும் கலப்பு இரட்டையர் SH6 |

2023 ஆம் ஆண்டில், சீனா, ஹாங்சோ நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டிகளில் குறிப்பிடத்தக்க வகையில் 28 தங்கம், 38 வெள்ளி மற்றும் 41 வெண்கலம் என 107 பதக்கங்களை வென்றதன் மூலம் சீர்மிகு 4 வது இடத்தை இந்தியா பெற்று பெருமை சேர்த்துள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணியில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் அதிக பதக்கங்களை வெல்வது இதுவே முதன் முறையாகும்.

## 8.4 ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களின் சாதனை விவரங்கள்

| வ. எண் | விளையாட்டு வீரர்களின் பெயர் | விளையாட்டு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|---|---|
| 1 | ராஜேஷ் ரமேஷ் | தடகளம் | 1 | 1 | – |
| 2 | சுபா வெங்கடேசன் | தடகளம் | – | 2 | – |
| 3 | வித்யா ராம்ராஜ் | தடகளம் | – | 2 | 1 |
| 4 | பிரவீன் சித்தரவேல் | தடகளம் | – | – | 1 |
| 5 | ஆர்.பிருத்விராஜ் தொண்டைமான் | துப்பாக்கி சுடுதல் | 1 | – | – |
| 6 | சவுரவ் கோசல் | ஸ்குவாஷ் | 1 | 1 | – |
| 7 | ஹரிந்தர் பால் சிங் சந்து | ஸ்குவாஷ் | 2 | – | – |
| 8 | அபய் சிங் | ஸ்குவாஷ் | 1 | – | 1 |

| வ. எண் | விளையாட்டு வீரர்களின் பெயர் | விளையாட்டு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|---|---|
| 9 | தீபிகா பல்லிகல் கார்த்திக் | ஸ்குவாஷ் | 1 | – | 1 |
| 10 | ஜோஷ்னா சின்னப்பா | ஸ்குவாஷ் | – | – | 1 |
| 11 | ராம்குமார் ராமநாதன் | டென்னிஸ் | – | 1 | – |
| 12 | V.ஆனந்த்குமார் | ரோலர் ஸ்கேட்டிங் | – | – | 1 |
| 13 | ஆரத்தி கஸ்தூரிராஜ் | | – | – | 1 |
| 14 | J.கார்த்திகா | | – | – | 1 |
| 15 | குகேஷ் .D | சதுரங்கம் | – | 1 | – |
| 16 | R. பிரக்ஞானந்தா | சதுரங்கம் | – | 1 | – |
| 17 | ஆர்.வைஷாலி | சதுரங்கம் | – | 1 | – |
| 18 | சவிதா ஸ்ரீ. B | சதுரங்கம் | – | 1 | – |
| 19 | சாய் கிஷோர் | மட்டைப் பந்து | 1 | – | – |
| 20 | வாஷிங்டன் சுந்தர் | மட்டைப் பந்து | 1 | – | – |

## 8.5 ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களின் சாதனை விவரங்கள்

| வ. எண். | விளையாட்டு வீரர்களின் பெயர் | விளையாட்டு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|---|---|
| 1 | D.சோலைராஜ் | பாரா தடகளம் | 1 | – | – |
| 2 | T.மாரியப்பன் | பாரா தடகளம் | – | 1 | – |
| 3 | முத்து ராஜா | பாரா தடகளம் | – | – | 2 |
| 4 | M. துளசிமதி | பாரா இறகுபந்து | 1 | 1 | 1 |
| 5 | மனிஷா ராமதாஸ் | பாரா இறகுபந்து | – | – | 3 |
| 6 | சிவராஜன் சோலைமலை | பாரா இறகுபந்து | – | – | 2 |
| 7 | நித்யா ஸ்ரீ S.S | பாரா இறகுபந்து | – | – | 3 |

அதிநவீன உட்கட்டமைப்பு, நவீன விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மேம்பட்ட பயிற்சி போன்ற அரசின் ஊக்குவிப்புகள் நமது விளையாட்டு வீரர்களின் வெற்றிக்கு வழிவகுக்கிறது. அரசின் இந்த முயற்சிகளுக்கு பிரதிபலனாக விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் வெற்றி பெற்று மாநிலம் மற்றும் தேசத்திற்கு பெருமை சேர்க்கின்றனர்.

## படலம் 9

# விருதுகள், ஊக்கத் தொகை, உதவித் தொகை, ஓய்வூதியம் மற்றும் பிற நலத் திட்டங்கள்

விளையாட்டு வீரர்கள் தங்கள் வாழ்க்கையில் கல்வி மற்றும் விளையாட்டு இரண்டிற்கும் முன்னுரிமை அளிக்கிறார்கள். தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் திறன் கொண்ட திறமையான நபர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு ஊக்கத் தொகை, உதவித் தொகை மற்றும் பிற வகையிலான உதவிகள் தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வருகின்றது.

### 9.1 விருதுகள்

பல்வேறு பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தியதற்காகவும், விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியதற்காகவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு விருதுகள்

வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது. மேலும், தேசிய மற்றும் சர்வதேச அரங்கங்களில் விளையாட்டு வீரர்களின் சாதனைகளுக்கு விருதுகள் மற்றும் ஊக்கத்தொகைகள் மூலம் ஊக்குவிப்பதற்கான முயற்சிகளுக்காகவும் இவ்வாணையம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**9.1.1 சிஐஐ விளையாட்டு வணிக விருது 2023**

தமிழ்நாட்டில் விளையாட்டுச் சூழலை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியதற்காக சிஐஐ விளையாட்டு வணிக விருது 2023–இல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு "விளையாட்டு மேம்பாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்" என அங்கீகாரம் வழங்கப்பட்டது.

**9.1.2 Sportstar Aces விருது–2023**

தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களின்

சிறப்பான சாதனைகளையும், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்துவதில் மாநிலத்தின் அர்ப்பணிப்பான முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் தமிழ்நாட்டினை கௌரவித்து 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 8–ஆம் தேதி மும்பையில் நடைபெற்ற ஸ்போர்ட்ஸ்டார் ஏசஸ் விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இச்சீரிய "விளையாட்டை மேம்படுத்துவதற்கான சிறந்த மாநிலம்" என்ற விருதினை பெற்றுக் கொண்டார்கள்.

**9.1.3 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது**

விளையாட்டு தொடர்பான பல்வேறு பிரிவுகளில் தனிநபர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது நிறுவப்பட்டது. முதலமைச்சர் விருது ஒவ்வொரு ஆண்டும் இரண்டு தலைசிறந்த

ஆண் விளையாட்டு வீரர்கள் மற்றும் இரண்டு சிறந்த பெண் விளையாட்டு வீராங்கனைகள், இரண்டு சிறந்த பயிற்றுநர்கள் மற்றும் இரண்டு சிறந்த உடற்கல்வி இயக்குநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு தலா ரூ.1.00 இலட்சம் ரொக்கப் பரிசு, ரூ.10,000/– மதிப்பிலான தங்கப் பதக்கம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பாராட்டுப் பத்திரம் ஆகியவைகள் வழங்கப்படுவதுடன், ஒரு விளையாட்டு நன்கொடையாளர், ஒரு விளையாட்டு அமைப்பாளர் மற்றும் ஒரு விளையாட்டு நடுவர் ஆகிய பிரிவுகளில் விருது பெறுபவர்களுக்கு ரூ.10,000/– மதிப்புள்ள தங்கப் பதக்கம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டு வருகிறது.

### 9.1.4 முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது

முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது சமூக மேம்பாட்டிற்கு இளைஞர்களின் பங்களிப்பை

அங்கீகரிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ளது. ஆண்டுதோறும், சுதந்திர தின கொண்டாட்டங்களுடன் இணைந்து, 15 முதல் 35 வயதுக்குட்பட்ட மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. 2023 ஆம் ஆண்டில், சென்னையில் 15.08.2023 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழா கொண்டாட்டத்தின் போது கீழ்க்காணும் நான்கு ஆண்கள் மற்றும் மூன்று பெண்களுக்கு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது வழங்கப்பட்டது.

| வ. எண். | ஆண்கள் | வ. எண். | பெண்கள் |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ். தஸ்தகீர், நீலகிரி மாவட்டம் | 1. | செல்வி. எம்.விஜயலட்சுமி, சென்னை மாவட்டம் |
| 2. | திரு. ஆர். தினேஷ் குமார், திருச்சி மாவட்டம் | 2. | செல்வி. எஸ். சந்திரலேகா, மதுரை மாவட்டம் |
| 3. | திரு. ஜி. கோபி, இராணிப்பேட்டை மாவட்டம் | 3. | செல்வி. கவிதா தாந்தோனி, காஞ்சிபுரம் மாவட்டம் |
| 4. | திரு. பி. ராஜசேகர், (சாகச விளையாட்டு) சிறப்பினம், செங்கல்பட்டு மாவட்டம் | | |

## 9.2 உயரிய ஊக்கத் தொகை (HCI)

தேசிய / சர்வதேச அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் பதக்கங்கள் வெல்வதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், அரசாணை (நிலை) எண்.18, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள்.29.07.2019 மற்றும் திருத்தப்பட்ட அரசாணை (நிலை) எண்.23, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள்.05.08.2021–படி உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021 –ஆம் ஆண்டு முதல் நாளது தேதி வரை 2730 விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.89.11 கோடி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

## பகுதி–1 ஒலிம்பிக், ஆசிய விளையாட்டு அல்லது காமன்வெல்த் விளையாட்டுகளில் உள்ளடக்கிய விளையாட்டுப் பிரிவுகள்

| வ. எண். | போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை (ரூபாய். இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | ஒலிம்பிக் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) (கோடை காலம்/குளிர்காலம்) | 300.00 | 200.00 | 100.00 |
| 2. | ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 50.00 | 30.00 | 20.00 |
| 3. | காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 50.00 | 30.00 | 20.00 |
| 4. | இளைஞர் ஒலிம்பிக் போட்டிகள் (கோடை/குளிர்காலம்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 25.00 | 15.00 | 10.00 |
| 5. | ஆசிய இளைஞர் விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 15.00 | 10.00 | 5.00 |
| 6. | உலக வாகையர் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 100.00 | 60.00 | 40.00 |
| 7. | உலக வாகையர் போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 75.00 | 50.00 | 30.00 |
| 8. | உலக வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்) | 50.00 | 30.00 | 20.00 |
| | | ஆண்டு முழுவதுற்கும் இவ்வகை போட்டிகளில் இந்த ஒரு போட்டி என்ற நிபந்தனைக்கு உட்பட்டு | | |
| 9 | வேறு ஏதாவது பெயரில் சர்வதேச கூட்டமைப்பு பெயரில் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு போட்டிகள் | ஒவ்வொரு நிலையிலான போட்டியும் தனியே அறிவிக்கப்பட வேண்டும் | | |
| | உலக வாகையர் போட்டிகள் ஒரு நிலை கீழ் | 30.00 | 20.00 | 10.00 |

| வ. எண். | போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை (ரூபாய். இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| | உலக வாகையர் போட்டிகள் இரண்டு நிலை கீழ் | 20.00 | 15.00 | 7.50 |
| | உலக வாகையர் போட்டிகள் மூன்று நிலை கீழ் | 15.00 | 10.00 | 5.00 |
| 10 | ஆசிய வாகையர் போட்டிகள் / காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (4 வருடங்களுக்கு ஒருமுறை) | 25.00 | 15.00 | 10.00 |
| 11 | ஆசிய வாகையர் போட்டிகள் / காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (2 வருடங்களுக்கு ஒருமுறை) | 15.00 | 10.00 | 5.00 |
| 12 | ஆசிய வாகையர் போட்டிகள் / காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும்) 10 நாடுகளுக்கு குறையாமல் பங்களிப்பு | 10.00 | 6.00 | 4.00 |
| 13. | ஆசிய கடற்கரை விளையாட்டுகள் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 5.00 | 3.00 | 2.00 |
| 14. | தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 5.00 | 3.00 | 2.00 |
| 15. | தேசிய விளையாட்டு போட்டிகள் (2 வருடங்களுக்கு ஒருமுறை) | 5.00 | 3.00 | 2.00 |
| 16. | தெற்காசிய வாகையர் போட்டிகள் / மூத்த தேசிய வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்) | 5.00 | 3.00 | 2.00 |
| 17 | வயது பிரிவினருக்கான உலக வாகையர் போட்டிகள்/ உலக கோப்பை போட்டிகள்(போட்டிகளை பொறுத்து கால அளவு மாறுபடும்) | 6.00 | 4.00 | 3.00 |
| | | இளையோர், மிக இளையோர் மற்றும் வயது பிரிவினருக்கான உலக அளவிலான போட்டிகளில் இது மிக உயர்ந்த போட்டியாக இருத்தல் வேண்டும். | | |

| வ. எண். | போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை (ரூபாய். இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 18 | ஆசிய வயது பிரிவினருக்கான வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும்) | 5.00 | 3.00 | 2.00 |
| | | இளையோர், மிக இளையோர் மற்றும் வயது பிரிவினருக்கான ஆசிய அளவிலான போட்டிகளில் இது மிக உயர்ந்த போட்டியாக இருத்தல் வேண்டும். | | |
| 19 | தேசிய வயது பிரிவினருக்கான வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும்) | 3.00 | 2.00 | 1.50 |
| | | இளையோர், மிக இளையோர் மற்றும் வயது பிரிவினருக்கான தேசிய அளவிலான போட்டிகளில் இது மிக உயர்ந்த போட்டியாக இருத்தல் வேண்டும். | | |

## பகுதி–2 பள்ளி விளையாட்டுகள் மற்றும் பல்கலைக்கழக விளையாட்டு போட்டிகள்

| வ. எண். | விளையாட்டு போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை (ரூபாய். இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | சர்வதேச பல்கலைக்கழக இணையத்தால் நடத்தப்படும் பல்கலைக்கழக/உலக பல்கலைக்கழக வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும்) | 6.00 | 4.00 | 3.00 |
| 2. | அகில இந்திய அளவிலான பல்கலைகழகங்களுக்கு இடையிலான போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்) | 3.00 | 2.00 | 1.50 |
| 3. | உலக பள்ளிகள் வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்) | 5.00 | 3.00 | 2.00 |
| 4. | ஆசிய பள்ளிகள் விளையாட்டு போட்டிகள்/ வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்) | 4.00 | 2.50 | 1.50 |
| 5. | இந்திய விளையாட்டு பள்ளி கூட்டமைப்பு மூலம் நடத்தப்படும் தேசிய பள்ளிகள் விளையாட்டு வாகையர் போட்டிகள் / கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்) | 2.00 | 1.50 | 1.00 |

## பகுதி–3A ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுகள் அல்லாத விளையாட்டு பிரிவுகள் – சதுரங்கம் மற்றும் வலுத்தூக்குதல்

| வ. எண். | விளையாட்டு போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை (ரூபாய். இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | உலகக் கோப்பை / உலக வாகையர் போட்டிகள் ஒருமுறை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தில்) | 50.00 | 30.00 | 20.00 |
| 2. | உலகக் கோப்பை / உலக வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்) | 20.00 | 15.00 | 10.00 |
| 3. | ஆசிய கோப்பை / ஆசிய வாகையர் போட்டிகள் / காமன்வெல்த் கோப்பை / காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (விளையாட்டு பிரிவுகளை பொறுத்து, கால அளவு மாறுபடும்) | 6.00 | 4.00 | 3.00 |
| 4. | மூத்தோர் தேசிய வாகையர் போட்டிகள் | 5.00 | 3.00 | 2.00 |

## பகுதி–3B ஒலிம்பிக், ஆசிய விளையாட்டு மற்றும் காமன்வெல்த் விளையாட்டுகள் அல்லாத மற்ற விளையாட்டு பிரிவுகள் –கேரம், வளைபந்து மற்றும் உடற்கட்டு (மூத்தவர்களுக்கு மட்டும்)

| வ. எண். | போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை (ரூபாய். லட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | உலகக் கோப்பை / உலக வாகையர் போட்டிகள் (ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தில்) | 20.00 | 15.00 | 10.00 |
| 1அ. | ஆசிய வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்) | 4.00 | 2.50 | 1.50 |

| வ. எண். | போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை (ரூபாய். லட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 2. | மூத்த தேசிய தெற்காசிய வாகையர் போட்டிகள (ஆண்டுதோறும் நடைபெறும்) | 2.00 | 1.50 | 1.00 |

## பகுதி–4 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டு போட்டிகள்

| வ. எண் | விளையாட்டுபோட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை (ரூபாய். லட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | பாராலிம்பிக்ஸ் (கோடைகாலம்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 300.00 | 200.00 | 100.00 |
| 2. | பாரா ஆசிய விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 50.00 | 30.00 | 20.00 |
| 3. | காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் (பாரா தடகள வீரர்கள்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 50.00 | 30.00 | 20.00 |
| 4. | ஆசிய பாரா இளைஞர்களுக்கான விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 15.00 | 10.00 | 5.00 |
| 5. | ஐபிசி உலகக் கோப்பை / உலக வாகையர் விளையாட்டு போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 75.00 | 50.00 | 30.00 |
| 6. | ஐபிசி உலகக் கோப்பை / உலக வாகையர் விளையாட்டு போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்) | 50.00 | 30.00 | 20.00 |
| 7. | ஐபிஎஸ்ஏ உலக விளையாட்டு போட்டுகள் (பார்வையற்ற விளையாட்டு வீரர்கள்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 25.00 | 15.00 | 10.00 |
| 8. | செவித்திறன் குன்றியோர்களுக்கான விளையாட்டு போட்டிகள் (டெஃப்லிம்க்ஸ் ) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 25.00 | 15.00 | 10.00 |

| வ. எண் | விளையாட்டுபோட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை (ரூபாய். லட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 9. | சிறப்பு ஒலிம்பிக் (கோடைகாலம் / குளிர்காலம்) (மன வளர்ச்சி குன்றியோர்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 15.00 | 10.00 | 5.00 |
| 10. | ஐடிஏஎப் உயரம் குன்றியோர்களுக்கான உலக விளையாட்டுகள் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | 5.00 | 3.00 | 2.00 |
| 11. | பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை மட்டைப்பந்து விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) | முதலிடம் 5.00 லட்சம்<br>இரண்டாமிடம் 3.00 லட்சம் | | |
| 12, | தேசிய பாரா விளையாட்டுகள் / IWAS உலக விளையாட்டுகள் (2 ஆண்டுகளுக்கு ஒருமுறை) (மூத்தோர் மட்டும்) | 5.00 | 3.00 | 2.00 |
| 13, | தேசிய பாரா வாகையர் விளையாட்டு போட்டிகள் (மூத்தோர் மட்டும்) | 5.00 | 3.00 | 2.00 |
| 14, | இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு கூட்டமைப்புகளால் நடத்தப்படும் வயது பிரிவினருக்கான தேசிய போட்டிகள் | 3.00 | 2.00 | 1.50 |

## 9.3 சிறப்பு உதவித் தொகை திட்டங்கள்

விளையாட்டு வீரர்கள் பெறும் வெற்றிகள் மற்றும் அதன் மதிப்புகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சிறப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம்

வடிவமைக்கப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு கணிசமான ஒத்துழைப்பினை அளிக்க பின்வரும் உதவித் தொகை திட்டங்கள் உள்ளன:

1. தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை (ELITE)
2. பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவித்திடும் திட்டம் (MIMS)
3. வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் (CDS)

### 9.3.1 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகைத் திட்டம் (ELITE)

ஒலிம்பிக் மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் சிறந்து விளங்கும் திறனுள்ள தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு தேவைக்கேற்ப உதவிடும் வகையில் "தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை திட்டம்" என்ற திட்டத்தை 2012 ஆம் ஆண்டு அரசு

தோற்றுவித்துள்ளது. 2023–2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட கூட்டத் தொடரில், இத்திட்டத்தின் கீழ் பயனடையும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை உயர்த்தி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின்படி, 12 விளையாட்டு வீரர்களிலிருந்து 25 விளையாட்டு வீரர்களாகவும், ஒரு நபருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.25.00 இலட்சத்திலிருந்து ரூ.30.00 இலட்சமாக நிதியுதவியாகவும், இத்திட்டத்தின்படி ஒரு நபருக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 30 இலட்சம் வரை நிதியுதவி வழங்கப்படுகிறது. தற்போது, 21 தலைசிறந்த விளையாட்டு வீரர்கள், அவர்களது திறனடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தில் உள்ள தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் பட்டியல் பின்வருமாறு:–

## தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் திட்டம்

| வ. எண். | பெயர் | விளையாட்டு |
|---|---|---|
| 1. | சுபா வெங்கடேசன் | தடகளம் |
| 2. | சி. பிரவீன் | தடகளம் |
| 3. | த. சந்தோஷ் குமார் | தடகளம் |
| 4. | எஸ். ஆரோக்கிய ராஜீவ் | தடகளம் |
| 5. | ஏ. தருண் | தடகளம் |
| 6. | சி. ஏ. பவானி தேவி | வாள்சண்டை |
| 7. | கே. சி. கணபதி | படகோட்டுதல் |
| 8. | நேத்ரா குமணன் | படகோட்டுதல் |
| 9. | வருண் அசோக் தக்கர் | படகோட்டுதல் |
| 10. | சரத் கமல் அச்சந்தா | மேசைப்பந்து |
| 11. | சத்தியன் ஞானசேகரன் | மேசைப்பந்து |
| 12. | ஜீவன் நெடுஞ்செழியன் | டென்னிஸ் |
| 13. | என். அஜித் | பளுதூக்குதல் |
| 14. | த. மாதவன் | பளுதூக்குதல் |
| 15. | பி. ஸ்ரீ நிவேதா | துப்பாக்கி சுடுதல் |
| 16. | ஆர். ராம்குமார் | டென்னிஸ் |
| 17. | ஆர். பிரக்ஞானந்தா | சதுரங்கம் |
| 18. | டி. குகேஷ் | சதுரங்கம் |
| 19. | மனிஷா ராமதாஸ் | பாரா இறகுபந்து |
| 20. | ஜெர்லின் அனிகா | பாரா இறகுபந்து |
| 21. | பிரித்விசேகர் | காது கேளாதோர் டென்னிஸ் |

### 9.3.2 பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவித்திடும் திட்டம் (MIMS)

சர்வதேச அளவில் பதக்கங்களை வெல்லும் நோக்கத்துடன் விளையாட்டுத் திறமைகளை

அங்கீகரித்து வளர்ப்பதற்காக பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவித்திடும் திட்டத்தினை 2018 ஆம் ஆண்டு அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. 2023–2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் கூட்டத் தொடரின் போது, இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையை 50லிருந்து 75 ஆகவும், ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதியுதவியினை ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.12.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கும், வெளிநாடுகளில் பயிற்சி பெறுதல் மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கும் நிதியுதவி வழங்கி ஆதரவளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போது கீழ்காணும் 37 விளையாட்டு வீரர்கள் நிதியுதவி பெற்று பயனடைந்து வருகின்றனர்.

# MIMS விளையாட்டு வீரர்கள் திட்டம்

| வ. எண். | பெயர் | விளையாட்டு |
|---|---|---|
| 1. | ஆர்.நித்யா | தடகளம் |
| 2. | கிரேசினா ஜி. மெர்லி | தடகளம் |
| 3. | பரத் ஸ்ரீதர் | தடகளம் |
| 4. | எஸ். சங்கர் | இறகுபந்து |
| 5. | கரண் பனீர் | இறகுபந்து |
| 6. | வி. எஸ். வர்ஷினி | இறகுபந்து |
| 7. | ஆர். அனுபமா | பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் |
| 8. | எஸ். ஸ்ரீகிருஷ்ணா | பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் |
| 9. | பி. வி. நந்திதா | சதுரங்கம் |
| 10. | பி. இனியன் | சதுரங்கம் |
| 11. | எஸ். ரோஹித் கிருஷ்ணா | சதுரங்கம் |
| 12. | கே. பி.  கிஷோ நிதி | வாள்சண்டை |
| 13. | பி. பெபிட் | வாள்சண்டை |
| 14. | சதாசிவன் சிவ மகேஷ் | வாள்சண்டை |
| 15. | ஆர். எஸ். ஷெர்ஜின் | வாள்சண்டை |
| 16. | மரியா அக்ஷிதா | வாள்சண்டை |
| 17. | எஸ். நிவேதா | கிக் பாக்ஸிங் |
| 18. | ஆரத்தி கஸ்தூரி ராஜ் | ரோலர் ஸ்கேட்டிங் |
| 19. | ஆனந்த்குமார் | ரோலர் ஸ்கேட்டிங் |
| 20. | அ. ரோஸ் மாஸ்டிகா மெர்லி | துடுப்புப் படகோட்டுதல் |
| 21. | த. சித்ரேஷ் | படகோட்டுதல் |
| 22. | ஆர். நர்மதா நிதின் | துப்பாக்கி சுடுதல் |
| 23. | ஸ்ரீ கார்த்திக் சபரி ராஜ் | துப்பாக்கி சுடுதல் |
| 24. | நிவேதிதா வி. நாயர் | துப்பாக்கி சுடுதல் |
| 25. | ஜோஷ்னா சின்னப்பா | ஸ்குவாஷ் |
| 26. | சுனைனா சாரா குருவில்லா | ஸ்குவாஷ் |
| 27. | அபய் சிங் | ஸ்குவாஷ் |

| வ. எண். | பெயர் | விளையாட்டு |
|---|---|---|
| 28. | ஷமீனா ரியாஸ் | ஸ்குவாஷ் |
| 29. | எஸ். தனுஷ் | நீச்சல் |
| 30. | ஏ. அமல்ராஜ் | மேசைப்பந்து |
| 31. | சுரேஷ் ராஜ் பிரியேஷ் | மேசைப்பந்து |
| 32. | செலினா தீப்தி | மேசைப்பந்து |
| 33. | எஸ். யாஷினி | மேசைப்பந்து |
| 34. | பி. அனுஷியா பிரியதர்ஷினி | டேக்வாண்டோ |
| 35. | பிரஜ்னேஷ் குணேஸ்வரன் | டென்னிஸ் |
| 36. | ரிஷிகிருஷ்ண அய்யப்பன் | டென்னிஸ் |
| 37. | என். ஸ்ரீராம் பாலாஜி | டென்னிஸ் |

### 9.3.3 வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் (CDS)

வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேசிய அளவில் 20 வயதிற்குட்பட்ட பிரிவில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு தேவைக்கேற்ப உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், விளையாட்டுச் சீருடைகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல், வெளிநாட்டில் பயிற்சி பெறுதல் மற்றும் போட்டி தொடர்பான செலவினங்களுக்கான நிதியுதவிகளை வழங்குகிறது.

## 9.4 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் 1978–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இது நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் விளையாட்டு வீரர்களுக்கு, விளையாட்டிற்கான அவர்களின் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில், அவர்களது ஓய்வுக்குப் பின்னர் அவர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிக்கும் பொருட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 58 வயது நிரம்பிய நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கு மாதந்தோறும் ரூ.6,000/– வீதம் உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தற்போது 75 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்கள் பயனடைந்து வருகின்றனர்.

## 9.5 விளையாட்டு வீரர்கள் நல நிதி

விளையாட்டுப் போட்டிகளின் போது காயமடையும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி வழங்குவதே விளையாட்டு வீரர்கள் நல நிதியின் நோக்கமாகும். மேலும், காயமடைந்த விளையாட்டு வீரர்களின் மறுவாழ்வு மற்றும் அவர்கள் காயங்களிலிருந்து மீள்வதற்கான ஆதரவினை வழங்குகிறது. விளையாட்டு வீரர்களின் நலனை கருத்தில் கொண்டு, விளையாட்டு வீரர்களுக்கு நேரிடும் எதிர்பாராத செலவினங்களை மேற்கொள்ளும் பொருட்டு விளையாட்டு வீரர் உதவித் தொகை ரூ.20.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## படலம் 10

## வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்வியில் விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு

தமிழ்நாட்டில் விளையாட்டு மற்றும் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்பதற்கான பல்வேறு முன்னெடுப்புகளையும், திட்டங்களையும் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ந்து வரும் திறமை மிக்க விளையாட்டு வீரர்களை அங்கீகரிக்கும் வகையில் ஒலிம்பிக் மற்றும் இதர சர்வதேச போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு குறிப்பிடத்தக்க ஊக்கத் தொகையினை அரசு வழங்கி வருகிறது. இருப்பினும், விளையாட்டு வீரர்களின் விருப்பங்களுக்கும் அவர்களின் விளையாட்டு வாழ்க்கையை வளமாக்குவதற்கும் இடையே இடைவெளி உள்ளது. இந்த இடைவெளியை போக்கும் பாலமாக மாநிலம் முழுவதும் எதிர்காலத்தில் வேலை

வாய்ப்புகளை உறுதிப்படுத்தவும், செயல்படுத்தவும் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

நமது திறமையான விளையாட்டு வீரர்கள் பலர் மாநில, தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பல்வேறு நிலைகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டுவதற்கும், விளையாட்டை ஆதரிக்கும் வகையிலும் இந்திய அரசும், பல்வேறு மாநில அரசுத் துறைகளும் கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் விளையாட்டு ஒதுக்கீட்டை தீவிரமாக செயல்படுத்தி வருகின்றது. இந்திய ரயில்வே, இந்திய இராணுவம், காவல்துறை, அரசு வங்கிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவை விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதிலும் அவர்களின் அர்ப்பணிப்பை போற்றும் வகையிலும் தகுதிவாய்ந்த திறமையான வீரர்களை பணிகளில்

நியமிக்கின்றன. இத்தகைய முன்முயற்சிகள் விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதோடு மட்டுமல்லாமல் விளையாட்டின் மூலம் தேசத்திற்கு பெருமை சேர்க்கும் அவர்களின் குறிக்கோளையும் அடைய தூண்டுகோலாக விளங்குகிறது.

## 10.1. அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களில் திறமையான விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்புகள்

திறமையான விளையாட்டு வீரர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையிலும், நமது மாநிலத்தை சேர்ந்த திறன் மிக்க விளையாட்டு வீரர்களை சர்வதேச அரங்கில் சிறந்து விளங்குவதை ஊக்குவிக்கும் நோக்கத்தோடும் தகுதியின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட பதவிகளில் அரசுத் துறைகளில் 3 சதவீத விளையாட்டு ஒதுக்கீடும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியமர்த்துவதற்கு

வழிவகை செய்து அரசாணை (நிலை) எண்.6, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள் 20.02.2019–ல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டு ஒதுக்கீட்டில் 46 கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மற்றும் 5 ஒலிம்பிக்கில் இல்லாத விளையாட்டுகள் அதாவது, ரோலர் ஸ்கேட்டிங், ஸ்குவாஷ், கபாடி, வூஷூ மற்றும் சிலம்பம் ஆகியவை அடங்கும்.

அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீத விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் மொத்தம் 13 தகுதி வாய்ந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## 10.2 தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தில் 10 சதவீத இடஒதுக்கீடு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மேற்கொள்ளப்படும் நியமனங்களிலும் தமிழ்நாடு வன சார்நிலைப் பணிகளிலும் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் வனவர், வனக்காப்பாளர், வனக் காவலர்கள் மற்றும் ஓட்டுநர் நியமனங்களிலும் 10% இட ஒதுக்கீடு விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 10.3 விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் தொழிற்முறை கல்லூரிகளில் சேர்க்கை

விளையாட்டு வீரர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் அரசு, பொறியியல் மற்றும் பிற தொழில் முறை கல்லூரிகளில் கீழ்க்காணும் வகையில் 500 இடங்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

## அ) பொறியியல் கல்லூரிகள்

| வ. எண். | நிறுவனங்களின் பெயர் | இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அண்ணா பல்கலைக்கழகம் –சென்னை | 12 |
| 2. | அரசு / அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் | 13 |
| 3. | அண்ணா பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகள் | 14 |
| 4. | சுயநிதி பொறியியல் கல்லூரிகள் (ஒரு கல்லூரியில் 1 இடம்) | 461 |
| **மொத்தம்** | | **500** |

## ஆ) பிற தொழில்முறை கல்லூரிகள்

| வ. எண். | தொழில்முறை படிப்பு விவரங்கள் | இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | **மருத்துவ கல்லூரிகள்** | |
| | இளங்கலை மருத்துவம், இளங்கலை அறுவையியல் (M.B.B.S) | 7 |
| | இளங்கலை பல் மருத்துவம் (B.D.S) | 1 |
| 2. | **தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் மீன்வளப் பல்கலைக்கழகம்** | |
| | இளங்கலை கால்நடை மருத்துவம் (B.V.Sc.,) (3 மாணவர்கள் மற்றும் 2 மாணவியர்கள்) | 5 |
| | இளங்கலை மீன் வளம் (B.F.Sc.,) | 2 |
| 3. | **சட்டக் கல்லூரி** | |
| | இளங்கலை சட்டம் (3 ஆண்டுகள்) | 11 |
| | இளங்கலை சட்டம் (5 ஆண்டுகள்) | 10 |

| வ. எண். | தொழில்முறை படிப்பு விவரங்கள் | இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 4. | **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்** | |
| | இளங்கலை அறிவியல் வேளாண்மை (B.Sc.,) | 1 |
| | இளங்கலை அறிவியல் தோட்டக்கலை (B.Sc.,) | 1 |
| | இளங்கலை வனவியல் (B.Sc.,) | 1 |
| | இளங்கலை பொறியியல் வேளாண்மை (பி.இ.,) | 1 |
| 5. | **அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்** | |
| | இளங்கலை பட்டம் | 3 |
| | முதுகலை பட்டம் | 2 |
| **மொத்த இடங்களின் எண்ணிக்கை** | | **45** |

அரசின் கொள்கை முடிவுகளான தொழிற்கல்லூரி சேர்க்கையில் இருக்கை ஒதுக்கீடு, காவல்துறை மற்றும் வனத்துறை தேர்வுகளில் 10% வேலைவாய்ப்பு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வேலைவாய்ப்புகளில் 3% இட ஒதுக்கீடு மற்றும் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கான வழிவகைகள் ஏற்படுத்துதல் ஆகியவை நமது விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் நம்பிக்கையை அதிகரிக்கின்றது.